# யாழ் - வெளிநார் 'டெலக்ஸ் தந்திச்சேவை ஆரம்பம்


விலை ரூபா 1-00 ★

# ஈழநாடு

THE EELANADU

மலர் 23 தை 11 றவி அவ் 27 இதழ் 342

யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை 24-1-82



**காணவில்லை**

சாம்பல் நிற அல்சேஷன் நாயை நேற்றுத் தொடக்கம் காணவில்லை. சுமார் 2 அடி உயரம். கண்டுபிடித்துத் தருப வருக்கு அல்லது தகவல் தருப வருக்குச் சன்மானம் வழங்கப் படும்.

த. இ. பாலசுந்தரம்
அம்மன் வீதி, கொக்குவில் கிழக்கு
அல்லது
பாமினி இறெசர்,
கோண்டாவில்.

2086


(யாழ்ப்பாணம்)

யாழ். - கொழும்பு நேரடி டெலக்ஸ் தந்திச்சேவை பெறும் யாழ்ப்பாணத்திலிருந்து மற்றும் பதினெரு நகரங்களுக்கு நேரடி டெலக்ஸ் தந்திச் சேவை நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. இதுவரை கொழும்பு தவிர்ந்த ஏனைய நகரங்களுக்கான தந்தி அனுப்புகையில் முதலில் கொழும்பிற்கு அனுப்பியே பின்னர் பிற இடங்களுக்கு அங்கிருந்து **அனுப்பிவைத்தனர்.**

புதிதாக யாழ்ப்பாணத்திலிருந்து நேரடி டெலக்ஸ் தந்திச் சேவை பெறும் 11 நகரங்கள் வருமாறு: கண்டி, காலி, மாத்தறை, களுத்துறை, மொரட்டுவை, கல்கிசை, தெஹிவளை, வெள்ளவத்தை, நீர்கொழும்பு கம்பகா, அவிசாவளை, புத்தளம்.

(8ம் பக்கம் பார்க்க)

# வெள்ளை அறிக்கையோசனைகள் சிலவற்றைக் கைவிடுவோம்

## 12 கொத்தணிப்பாடசாலைகள் பரீட்சார்த்தமாக அமையும்

### பாராளுமன்றத்தில் கல்வி அமைச்சர் விளக்கம்

(கொழும்பு)

''கல்வி வெள்ளை அறிக்கையிலுள்ள யோசனைகளை மறுபரிசீலனை செய்வோம். அந்தயோசனைகளில் சிலவற்றை அப்படியே அமுல் செய்வோம்; சிலவற்றில் திருத்தம் செய்வோம்; சிலவற்றைக் கைவிட்டுவிடுவோம். கொத்தணிப் பாடசாலை முறை பற்றிய பல்வேறு கருத்துக்களையும் கவனத்துக்கு எடுப்போம். முதலில் 12 அல்லது 15 சொத்தணிப் பாடசாலைகளைப் பரீட்சார்த்தமாக அமைத்து அத்திட்டம் நூற்றுக்கு நூறு வெற்றி அளிக்கும் பட்சத்தில் மட்டுமே அத்திட்டத்தைத் தொடர்ந்து அமுல் செய்வோம்''

மேற்கண்டவாறு கல்வி அமைச்சர் திரு,ரணில்விக்கிரமசிங்கா நேற்றுமுன் தினம் பாராளுமன்றத்தில் வெள்ளை அறிக்கை மீதான விவாதத்தில் பேசுகையில் கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

''வெள்ளை அறிக்கையை அமுல் செய்வதற்கு தேவையான நிதிபற்றிச் சபையில் பலரும் பிரஸ்தாபித்தார்கள்

''மகாவலித்திட்டம் போன்று சர்வதேச நிதி நிறுவனங்களின் உதவியுடன் கல்வி வெள்ளை அறிக்கையை அமுல் செய்வோம்.

''ஆங்கிலக்கல்வி' இன்று உயர் மட்டத்திலுள்ளவர்களினதும் வசதிபடைத்தவர்களினதும் ஏகபோகச் சொத்தாக உள்ளது. என்வேதான் ஆங்கிலக்கல்வி சகல மக்களுக்கும் கிடைக்கக்கூடிய விதத்தில் 3ம் வகுப்பு முதல் பல்கலைக்கழகம் வரை கற்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

''எனது கொடும்பாவிகளை எத்தனை தடவை வேண்டுமானாலும் யார் வேண்டுமானாலும் எரிக்கட்டும். என்னைப் பொறுத்தவரை மாணவசமுதாயத்தின் சிறந்த எதிர்காலமே முக்கியம்; அதுவே தேவை; அதற்காகவே நான் பிரார்த்திக்கிறேன்,

(8-ம் பக்கம் பார்க்க)


**Regional Young Scientists**

**(பிராந்திய இளம் விஞ்ஞானிகள்)**

யாழ்ப்பாண லயன்ஸ்கழகம் நடாத்தும் விஞ்ஞான அறிவை சகல துறைகளிலும் மேன்மையாகப் பெற்றுள்ள சிறந்த இளைஞர்களை வட மாகாணத்தில் தேர்ந்தெடுப்பதற்காகப் போட்டி நடாத்தப்பட இருக்கிறது. இளம் விஞ்ஞானிகளாகத் தேர்ந்தெடுப்பவர்களுக்குப் பெறுமதிவாய்ந்த பரிசுகளும்சான்றிதழ்களும் வழங்கப்பட இருக்கிறது.

**போட்டி விதிகள்:**

1. 30-6-1963க்குப் பின் பிறந்த இளைஞர்கள் யாவரும் இதில் பங்கு பற்றிக் கொள்ளலாம்.
2. இந்தப் போட்டி முறையே (1) எழுத்து மூலமாக நடைபெறும் விஞ்ஞான அறிவுப்போட்டி, (2) விஞ்ஞானக் கட்டுரைப் போட்டி (3) விஞ்ஞான வளர்ச்சிக்காகத் தான்செய்த சேவைஅல்லது அவரின் ஓர் புதிய கண்டுபிடிப்பு, (4) நேர்முகப் பரீட்சை ஆகியனவற்றைக் கொண்டே தேர்ந்தெடுக்கப்படுவர். இதற்கான தேதிகள் அவ்வப்போது அறிவிக்கப்படும்.
3. மேற்குறிப்பிட்ட போட்டிகள் யாழ்ப்பாணத்தில் நடைபெறும். இதற்கான போக்குவரத்துச் செலவுகள் கொடுக்கப்படமாட்டாது.
4. கழகக் குழுவினால் நியமிக்கப்பட்ட மத்தியஸ்தர்கள் முடிவே இறுதியானதாகும்.
5. இப் போட்டிக்கு விண்ணப்பிக்கும் முறை: (1) பெயர் (2) விலாசம் (3) பிறந்த திகதி இம் மூன்றையும் குறிப்பிட்டு கீழ்க்காணும் விலாசத்திற்கு அனுப்பி வைக்கவும்.

விண்ணப்பத் தேதி முடிவு 15 2-1982.

செயற்திட்டக் குழுத் தலைவர்

**லயன்ஸ் கழகம்**

6, நல்லூர் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.

2047


## 150 பவுண்நிறை நகையும் ரூ.60,000 ரொக்கமும் கொள்ளை! நவக்கிரியில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

நவக்கிரியில் நேற்றுமுன் தினமிரவு வீடொன்றில் துப்பாக்கி முனையில் 3லட்சத்து 30 ஆயிரம் ரூபா பெறுமதியான நகைகளும், ரொக்கப்பணமும் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

புத்தூர் மேற்கு நவக்கிரியிலுள்ள இளையதம்பி வேலுப்பிள்ளையின் வீட்டிலேயே இக் கொள்ளை நடந்துள்ளது.

கொள்ளைச் சம்பவம் நடைபெற்றபோது அவ்வீட்டில் வேலுப்பிள்ளையும் அவரது மகளும், மருமகனும், இரு குழந்தைகளும இருநததாகவும் அங்குவந்த 7 பேர் கொண்ட கோஷ்டியில் 4பேர் துப்பாக்கி வைத்திருந்ததாகவும் ஒருவர் கிறிஸ்கத்தி வைத்திருந்ததாகவும்சுன்னுகம் பொலிஸில் இக் கொள்ளை சம்பந்தமாக புகார் செய்யப்பட்டுள்ளது.

சுன்னுகம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி திரு. பொன். சுகுணேந்திரன், சப் இன்ஸ்பெக்டர் திரு. சிவராசா தலைமையில் சென்ற பொலிஸ் கோஷ்டியினர் விசாரணையில் ஈடுபட்டுள்ளனர்.

135 பவுண் நகைகள் குகினியில் புதைக்கப்பட்டிருந்த இடத்திலிருந்து தோண்டி எடுக்கப்பட்டதாகவும், குழந்தையின் தலையணைக்குள் 15 பவுண் நகைகள் எடுக்கப்பட்டதாகவும் மற்றும் விவசாயப் பொருட்கள் விற்பனைமூலம் நேற்றுமுன்தினம் பெற்ற ரொக்கப்பணம் 60,000 ரூபாவும் கொள்ளையடிக்கப்பட்டதாகவும் பொலிசில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (மா—க)

### கோவிலுக்குச் சென்று திரும்பிய

## பெண்ணின் தங்கச் சங்கிலி வழிப்பறி: ஒருவர் பிடிபட்டார்!

(யாழ்ப்பாணம்)

கோவிலுக்குச் சென்று வீடு திரும்பிய ஒரு பெண்ணின் ஆருயிரம் ரூபா பெறுமதியுடைய தங்கச் சங்கிலியை அறுத்துக்கொண்டு ஓடிய சைக்கிள் வாலிபர் பொதுமக்களினல் துரத்திப் பிடிக்கப்பட்டு நையப்புடைக்சுப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

இச்சம்பவம் நேற்று முன் தினமிரவு சுமார் எட்டுமணியளவில் யாழ்ப்பாணம் வைமன் வீதியில் நிகழ்ந்தது.

(8-ம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சி தனிமாவட்டப் ஆராய 'தேவா' வருகிருர்

(கொழும்பு)

கிளிநொச்சித் தொகுதியைத் தனி மாவட்டமாக்குவது குறித்து நேரில் ஆராயும் பொருட்டு உள்நாட்டு அலுவல் அமைச்சர் திரு. கே. டபிள்யூ. தேவநாயகம் அடுத்த மாதம் 18—ந் திகதி கிளிநொச்சிக்கு விஜயம் செய்கிருர்.

கிளிநொச்சித்தொகுதியைத் தனி மாவட்டமாக்கும் கிளிநொச்சி எம். பி. திரு. வி. ஆனந்தசங்கரி பாராளுமன்றத்தில் கோரிக்கை விடுத்திருந்தது தெரிந்ததே.

கிளிநொச்சியில் உள்ள பளை, பூநகரி அரகாங்க அதிபர் பிரிவுகளில் உள்ள கிராம முன்னேற்றச் சங்கங்களும் பொது ஸ்தாபனங்களும் கிளிநொச்சித் தொகுதியைத் தனி மாவட்டமாக்கும் நடவடிக்கைக்குத் தேவையானவற்றை நேரில் வந்து ஆராயுமாறு அமைச்சரிடம் விடுத்த வேண்டுகோளை அடுத்தே அமைச்சர் கிளிநொச்சிக்கு விஜயம் செய்கிருர். (இ)

ஆயுதப்படையினருக்கு அரசு வழங்கியுள்ள

# கட்டுப்பாடற்ற அதிகாரங்களை நிறுத்த குரல் எழுப்ப வேண்டும்

## வவுனியாவில் நிகழ்ந்த படையினரின் தாக்குதல்பற்றி வணபிதாக்கள் அறிக்கை

(வவனியா)

வவனியா தொகுதியில் உள்ள மணியார்குளம், கல்லாறு, கணேசபுரம் கூழாங்குளம் ஆகிய கிராமங்களில் வசிக்கும் பொது மக்கள்மீது இம்மாதம் 7 ம் தேதி அதிகாலை 1 மணிக்கு பொலிசார், இரகசியப் பொலிசார் உட்பட பாதுகாப்புப் படையினர் பலத்த தாக்குதல் நடத்தியுள்ளார்கள்.

''வவனியா மிஷன் கவுசைச் சேர்ந்த வணபிதா டாக்டர் டி. ஜே. கனகரத்தினம், வணபிதா ஜெயசிறி பீரிஸ் ஆகியோர் கூட்டாக வெளியிட்டுள்ள அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளனர்.

தாக்குதல் நடைபெற்றதாகக் கூறப்படும் கிராமங்களுக்கு தாங்கள் நேரடியாகச் சென்று அப்பகுதி மக்களை நேரடியாகச் சந்தித்து இவ்விபரங்களைத் திரட்டியதாகவும் தெரிவித்துள்ளனர்.

அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:—

**தொடர் தாக்குதல் சம்பவங்கள்**

வவனியா மாவட்டத்தில் அப்பாவி மக்கள்மீது பாதுகாப்புப்படையினரின் தாக்குதல் கடந்த வருடம் நவம்பர் மாதம் ஆரம்பமானது. நவம்பர் 16 ம் தேதி, பாலமோட்டையில் விவசாயிகள்மீது பாதுகாப்புப்படையினர் பெருமளவில் தாக்குதல் நடத்தினர். நவம்பர் 19 ம் தேதி மடுவுக்குச் சமீபத்திலுள்ள பெரிய தம்பானையில் மற்றொரு தாக்குதல் நடைபெற்றது. இத்தாக்குதலில் இரு இளைஞர்கள் துப்பாக்கிச்சூட்டுக்குப் பலியானார்கள். அப்பகுதி மக்கள் இன்றும் அச்சத்தின் மத்தியில் வாழ்ந்துவருகின்றார்கள். இவ்வருடம் ஜனவரி 7 ம் தேதி விவசாயிகள்மீது மேலும் தாக்குதல்கள் இடம்பெற்றன.

அச்சமயம் என்னோடு தனியாக தங்கியிருந்த வணபிதா ஜெயசிலி பீரிஸுடன் உடனடியாக தாக்குதல் இடம்பெற்ற கிராமங்களுக்குச் சென்று மக்களை சந்தித்தேன் அவர்கள் கீழ்க்காணும் விபரங்களை தெரிவித்தனர்.

ஜனவரி 7ம் தேதி, அக்கிராமங்களிலுள்ள ஒவ்வொரு வீடுகளும் பாதுகாப்பு படையினரால் சோதனையிடப்பட்டதாக எங்களுக்கு தெரிவிக்கப்பட்டது. மக்கள் இம்சிக்கப்பட்டதாகவும், பொது இடமொன்றுக்கு அழைத்துச் செல்லப்பட்டு விசாரணை செய்யப்பட்டதுடன் இழிவுபடுத்தி துன்புறுத்தப்பட்டதாகவும் தெரிவித்தனர்.

சிங்கள மொழி தெரிந்தவர்களுக்கு பாதுகாப்புபடையினர் அக் கிராமங்களில் கடமையாற்றும் தொண்டர்கள் பற்றியும் இளம் பெண்கள் பற்றியும் தெரிவித்த தரம் குறைந்த குறிப்புகளை அறிந்திருப்பார்கள்.

**கலவரத்தால் பாதிக்கப்பட்ட மலையக மக்கள்......**

அண்மையில் நடந்த இனக் கலவரத்தினால் பாதிக்கப்பட்டு அகதிகளாக வந்து வவுனியா பகுதிகளில் குடியேறிய மலைநாட்டு தமிழ் தோட்டத் தொழிலாளர்கள் குடும்பங்களே அதிகமாக துன்புறுத்தலுக்கது ஆளாகினர்கள்.

**வாகனங்களால் பயிர்களை நாசம் செய்தனர்**

பல கஷ்டங்களுக்கு மத்தியில் இத் தோட்டத் தொழிலாளர்கள் காடுகளைவெட்டி வீடுகள் அமைத்து விவசாயத்தில் ஈடுபட்டுவருகின்றனர் இந்த ஏழை மக்களின் விவசாய நிலத்தில் பாதுகாப்பு படையினரின் 'டிரக்' செலுத்தப்பட்டதால் பயிர்கள் பாதிப்படைந்தன.

**உணவு அருந்தவிடாது விசாரணை**

மக்கள் காலை முதல் மாலை வரை குடிசையிலிருந்து வெளியில் இழுத்தெடுக்கப்பட்டு காலை உணவோ நண்பகல் உணவோ இன்றி மாலைவரை விசாரணைக்குட்படுத்தப்பட்டனர். பாதுகாப்பு படையினருக்கு உணவு ஹெலிகொப்டர் மூலம் வழங்கப்பட்டது.

தாக்குதலுக்குப்பின் மக்கள் மனம் குழம்பிய நிலையில் பயத்தின் மத்தியில் கண்ணீர் விட்டபடி தங்கள் சோகக் கதைகளை எம்மிடம் தெரிவித்தனர்.

இந்த ஏழை மக்களுக்கு வவனியா காந்தீய இயக்கம் மட்டுமே உதவிகள் செய்து வந்தது. இவர்கள் இம்மக்களின் சமூக, பொருளாதார, கலாச்சார, கல்வி முன்னேற்றத்துக்குப் பாடுபட்டுவருகின்றனர். காந்தீயம் மட்டுமே விமோசனம் அளிக்குமென்ற நம்பிக்கையில் அம்மக்கள் வாழ்ந்து வருகின்றார்கள்.

**மாணவ? தொண்டர்கள் இம்சிக்கப்பட்டனர்**

பாதுகாப்புப் படையினரால் மணியர்குளத்தில் பெண் தொண்டர்களான செல்விகள் சுததேவி, செல்வி அஞ்சலின் மேரி ஆகியோர் இம்சிக்கப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டனர். மற்றொரு தொண்டரான அந்தோனி பாலன் பலமாகத் தாக்கப்பட்டார். கூழாங்குளத்தைச் சேர்ந்த செல்வி குணதேவி பாதுகாப்பில் வைக்கப்பட்டார். அவர் வுவுனியா பொலிஸ்நிலையத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு, இரவு முழுவதும் அங்கு தடுத்துவைக்கப்பட்டார். மற்றொரு தொண்டரான ரவீந்திரன் கைதுசெய்யப்பட்டு இராணுவ முகாமிற்குக் கொண்டு செல்லப்பட்டார். கணேசபுரத்தைச் சேர்ந்த செல்லையாவும், அவரது சகோதரரும் தாக்கப்பட்டனர்.

**தேசியவாதிகளை வேட்டையாடுகிறார்கள்**

தமிழ் பயங்கரவாதிகளையும் திருடர்களையும் கண்டுபிடிப்பதென்ற போர்வையில் எல்லாத் தமிழ்த் தேசியவாதிகளையும் அவர்கள் வேட்டையாடுகிறார்கள் இது மாபெரும் தவறாகும். தமிழ்த் தேசியம் சம்பந்தப்பட்ட எல்லாமே இராணுவத்தினராலும் பொலிசாராலும் முறைகேடான முறையிலும், அவதூறாகவும் நடத்தப்படுகிறது. இதன் மூலம் அவர்களின் மொழி, கலாச்சாரம் சம்பந்தப்பட்ட கண்ணியமான உணர்வுகளை இம்சைப்படுத்துகிறார்கள்.

(5 ம் பக்கம் பார்க்க)

மட்டு. அபிவிருத்திசபைக் கூட்டத்தில்

# அமைச்சர்கலந்துகொள்வாரா

## தலைவர் அனுமதிப்பாரா?'

### நாளையதினம் தெரியவரும்

— இரா. உதயகுமர் —

மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்தி சபை நாளை கூடும் போது பதவி வழியாக அங்கத்துவம் பெறும் பிராந்திய அபிவிருத்தி அமைச்சர் திரு. செ. இராசதுரையின் நிலைமை என்ன? அவர் கலந்துகொள்வாரா? அப்படியாயின் சபைத் தலைவர் அனுமதிப்பாரா? என்ற கேள்விகள் தற்போது அவரின் ஆதரவாளர்கள் மத்தியில் பரவலாக எழுந்துள்ளன.

அமைச்சர் திரு. செ. இராசதுரை செப்டம்பர் 21ம்திகதிக்கு பின்பு நடைபெற்ற அக்டோபர், நவம்பர், டிசம்பர் மாத சபைக் கூட்டத்தில் பங்குபற்றவில்லை. இந்நிலையில் டிசம்பர் 28ம் திகதி பட்டிருப்பு பாராளுமன்ற உறுப்பினர் திரு. பூ. கணேசலிங்கம் இதுபற்றி பிரஸ்தாபித்தபோது சபை இதனை உள்ளூராட்சி அமைச்சுக்கு அறிவிப்பதாக தீர்மானம் செய்தது.

அதன் பின்பு இம்மாதம் 5ம் திகதி நடைபெற்ற சபையின் விசேட கூட்டத்தில் அமைச்சர் திரு. இராசதுரை கலந்து கொண்டபோது சபைத் தலைவர் திரு. சீ. சம்மந்தமூர்த்தி அவரிடம் மூன்று மாதம் சபைக்கு வராதமையினால் அங்கத்துவம் இழந்து விட்டதாகவும் வெளியேறும்படியும் கூறினார்.

அப்போது திரு. இராசதுரை என்னால் வெளியேற முடியாது. நான் வெளியேற வேண்டுமானால் அதற்குரிய விளக்கம் தரவேண்டும். சட்டத்தின்படி ஜனவரி 21ம் திகதி வரை பதவி வகிக்கலாம் என்றார். அப்போ தலைவர் உங்கள் பிரச்னை சட்டமா அதிபருக்கு அனுப்பப்பட்டுள்ளது. முடிவு வரும்வரை கலந்து கொள்ள முடியாது என்றார்,

இந்நிலையில் தமிழர் விடுதலைக் கூட்டணியினர் திரு. இராசதுரை வெளியேறுவது தான் முறை என்றும் ஐக்கிய தேசியகட்சி உறுப்பினர் வெளியேற முடியாதெனவும் வாதாடினர் இந்நிலையில் கூட்டத்தை தொடர்ந்து நடாதத முடியாத நிலையில் தலைவர் ஒத்தி வைத்தாார்.

அதன் பிறகு கூட்டம் மீண்டும் நாளை திங்கட்கிழமை நடைபெறுகின்றது. இந்நிலையில் அமைச்சர் திரு. இராசதுரை மீண்டும்சபைக்கு செல்லவுள்ளார். ஆனால் இந்நிலையில் தலைவர் திரு. சீ. சம்மந்தமூர்த்தி அனுமதிக்கமாட்டார். அப்படியான சூழ்நிலை ஏற்பட்டால் மீண்டும் சபையில் பிரச்னை ஏற்பட்டு கூட்டம் நடாத்த முடியாத நிலைமை ஏற்படலாம்.

இந்நிலையில் மாவட்ட அபிவிருத்தி சபைகள் சட்டத்தின் 16ம் பிரிவின் (1) உப பிரிவில்: அபிவிருத்தி சபையிடம் ஏற்கனவே லீவு பெறாமல் சபை கூட்டத்திற்கு 3மாத சமூகம் தராத உறுப்பினர் ஒருவர் தமது பதவியிலிருந்து நீங்கியவராக கருதப்படுவார். என உள்ளது.

அதே 16ம் பிரிவின் (11) உப பிரிவில் அவ்வாறு பதவிநீங்கிய உறுப்பினர் சபையின் பதவிசால் உறுப்பினராக இருந்தால் சபையின் செயலாளர் தேர்தல் ஆணையாளருக்கு அறிவிக்க வேண்டும்.

1ம் உப பிரிவில் 3மாத கால எல்லை, அங்கத்தவர் ஒருவர் சமூகமளித்த கடைசிக்கட்டத் திகதியிலிருந்தா அல்லது சமூகம் கொடுக்கப்பட்டத் திகதியிலிருந்தா என்பது தெளிவாக இல்லை.

அதேநேரத்தில் சபை உறுப்பினர் ஒருவர் சபையின் கூட்டங்களுக்குத் தொடர்ச்சியாக மூன்று மாதங்களாக சமூகமளிக்காவிட்டால் அவர் தமது உறுப்புரிமையை தாமாகவே இழந்து விடுகின்றார் எனச் சட்டம் கூறுகிறது. ஆனால் உறுப்பினர் சமூகம் அளிக்சத் தவறிய அந்த மூன்று மாத காலம் குறிப்பிட்ட உறுப்பினர் சமூகம் அளிக்காத முதற் கூட்டம்நடந்ததிகதியிலிருந்தே கணிக்கவேண்டும். இந்நிலையில் எதிர்வரும் 27 ம் திகதி வரை அவர் பதவி வகிக்க முடியுமாம்.

(5ம் பக்கம் பார்க்க)

## மக்கள் கருத்து

### நேரம் பிந்திக் கிடைக்கும் தபால்

காங்கேசன்துறையில் வெளியிடங்களில் இருந்துவரும் கடிதங்கள் உரிய விலாசகாரர் கைகளுக்குக் கிடைக்காமல் ஊழியர்கள் தங்களுக்கு வசதியான இடங்களில் அதாவது சந்தைகளில் வேறு யாரிடமும் கொடுத்து, கொடுக்கச் சொல்லி சென்றுவிடுகின்றார்கள். காலை 9 மணிக்கு கிடைக்கவேண்டிய கடிதம், மாலையில்தான் கைகளுக்குக் கிடைக்கின்றது. இந்த நிலைமை மேலும் நீடிக்காமல் உடன் தபால் கந்தோர் அதிபர் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

**ந. கனகலிங்கம்.**
காங்கேசன்துறை.

# இந்திய ஜனதிபதி வருகையை

# த. காங். ஏன் பகிஷ்கரிக்கிறது

## டாக்டர் ஏபிரகாம் விளக்கம்

(யாழ்ப்பாணம்)

இந்திய ஜனதிபதி திரு. நீலம் சஞ்சீவரெட்டி பெப்ரவரி மாதம் 4 ம் திகதி தவிர்ந்த வேறொரு நாளில் தனிப்பட்ட முறையில் யாழ்ப்பாணம் வருவாரேயானால் தமிழ்க்காங்கிரஸ் அவரை முழுமனதுடன் வரவேற்கும்.

இலங்கை சுதந்திரமடைந்த பெப்ரவரி 4 ம் திகதியை தமிழ் மக்கள் இதுவரை காலமும் துக்கதினமாகவே அனுஷ்டித்து வந்துள்ளனர். அதுபோல் இம்முறையும் அனுஷ்டிக்கத் தீர்மானித்துள்ளனர். அத்துடன் இந்திய ஜனதிபதியுடன் அன்றையதினம் வர்த்தக, கப்பற்துறை அமைச்சரும் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்கிறார். யாழ்ப்பாணத்தில் அண்மையில் நடைபெற்ற வன்முறைச் சம்பவங்களால் மக்கள் மிகவும் நொந்த நிலையில் இருக்கிறார்கள்; இச்சம்பவங்கள் உலகளாவிய நிலையில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது. இதனாலேயே நாம் திரு. ரெட்டியின் யாழ். விஜயத்தைப் பகிஷ்கரிக்க முடிவு செய்துள்ளோம்.

இவ்வாறு யாழ். மாநகர சபையின் தமிழ்க் காங்கிரஸ் உறுப்பினர் டாக்டர் ஏ. எல். ஏபிரகாம் தெரிவித்துள்ளார். இதற்குமுன் இந்தியாவிலிருந்து யாழ். நகர் வருகைதந்த இந்திய ஜனதிபதிகளான திரு. ராஜேந்திரபிரசாத், திரு. வி. வி. கிரி மற்றும் திருமதி விஜயலட்சுமி பண்டிட் ஆகியோர் சுதந்திரதினம் அல்லாத பிறிதொருதினத்தில் தனிப்பட்ட முறையில் இங்கு வந்தபோது அவர்களுக்கு அமோக வரவேற்பளிக்கப்பட்டது. என்றும் அவர் தெரிவித்தார்.

திரு. ரெட்டிக்கு அளிக்கப்படும் பெப்ரவரி 4 ம் திகதி வரவேற்பை தமிழ் காங்கிரஸ் பகிஷ்கரிக்க இருப்பது திரு. ரெட்டியையோ அன்றி அவரது யாழ். விஜயத்தையோ தமிழ்காங்கிரஸ் எதிர்க்கிறது என அர்த்தமல்ல என்றும் டாக்டர் ஏபிரகாம் கூறினார்

இது சம்பந்தமாக மேற்கொண்டு நடவடிக்கை எடுப்பது பற்றி தமிழ்க்காங்கிரஸ் கட்சி ஆலோசனைக் கூட்டம் ஒன்றை நடத்த இருக்கிறது என்றும் அவர் கூறினார்:

**ஆலோசனைக் கூட்டத்தை பகிஷ்கரிக்குமா?**

இதே ரெட்டிக்கு யாழ். மாநகர சபை அளிக்க இருக்கும் வரவேற்பு குறித்து

(7ம் பக்கம் பார்க்க)

# சமாதானமே அபிவிருத்திக் கனவுகளை நனவாக்கும்

## யுத்தத்தை தடுக்க முடியும்; அது தடுக்கப்படவும் வேண்டும்

### இந்திரா காந்தி விசேட பேட்டி

புதுடில்லி, ஜன. 23

''யுத்தத்தைத் தடுக்க முடியும் நமது அணு சகாப்தத்தில் யுத்தம் தடுக்கப்படல் வேண்டும். சமாதானம் வெல்லற்கரியதாக்கப்படல் வேண்டும், இந்த லட்சியத்துக்காக நாம் நமது முழுப் பலத்துடன் உழைக்க வேண்டும்''.

இவ்வாறு இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி ஏபி என் நிருபருக்களித்த பேட்டியில் குறிப்பிட்டார்.

யுத்தம் ஒன்று எங்கு நடைபெற்றாலும், அது ''வரையறுக்கப்பட்ட''தாயிருந்தாலும் கூட அது உலககன்ற சேதத்தையே ஏற்படுத்தும். மிகப் பெரிய அணுவாயுதங்களைக் கொண்ட நாடுகளைச் சம்பந்தப்படுத்தும் யுத்தம் நாகரீகத்தின் அழிவைத்தான் குறிக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது ஐரோப்பிய தலைவர்களும் மக்களும் எதார்த்த நிலைமைகளைப் புரிந்து கொண்டுள்ளதையும் முரண்பாடுகள் மோதல்களைத் தவிர்க்க ஆர்வம் கொண்டுள்ளதையும் எனது ஐரோப்பிய விஜயத்தின் போது அவதானிக்க முடிந்தது. ஐரோப்பாவிலும் ஆசியாவின் சில பகுதிகளிலும் யுத்தத்தின் பாதிப்புகள் பற்றிய நினைவுகள் இன்னும் பசுமையாகவுள்ளன. ஜப்பானிய மக்கள் அணுவாயுதங்களின் விளைவுகளை இன்னமும் மறக்கவில்லை. இந்தியர்களான நாம் சமாதானத்தை விரும்புகிறோம். ஏனெனில் அதுதான் எமது அபிவிருத்திக்கான கனவுகளை, நனவாக்கும் ஒரேயொரு நிலைபாடு.

1983ம் ஆண்டிலாவது இந்து சமுத்திரம் பற்றிய சர்வதேச மகாநாடு நடைபெறும் என்று நம்புகிறேன் 2971ல், இந்து சமுத்திரத்தை சமாதான மண்டலமாக்கும் ஐ. நா. பிரகடனத்தை இந்தியாவும் சேர்ந்து கூட்டாகத் தயாரித்து என்பதை எவரும் மறந்துவிட முடியாது.

''ராணுவத் தளங்களும், ராணுவ பிரசன்னமும் சமாதானத்துக்கு ஏற்றவைஅல்ல. இது எல்லாரலும் அங்கீகரிக்கப்படுமென நான் நம்புகிறேன்'' (இ)

## சத்திர சிகிச்சையின் பின் பிரதமர் ஓய்வெடுக்கிறார்

(கொழும்பு)

சான்பிரான்சிஸ்கோ ஆஸ்பத்திரியில் சத்திர சிகிச்சைக்குள்ளான பிரதமர் திரு. ஆர். பிரேமதாசா ஆஸ்பத்திரியை விட்டு வெளியேறி ஹவாயில் ஓய்வெடுத்துக் கொண்டிருக்கிறார்.

உத்தியோகபூர்வ அலுவல்களைத் தவிர்த்து சிறிதுகாலம் ஓய்வெடுக்குமாறு டாக்டர்கள் ஆலோசனை தெரிவித்ததை அடுத்தே திரு. பிரேமதாசா ஓய்வெடுத்து வருகிறார் எனத் தெரிவிக்கப்பட்டது.

சிகிச்சைக்காக அமெரிக்கா சென்ற திரு. பிரேமதாசாவின் பித்தப் பையிலிருந்து கடந்த புதன்கிழமை சத்திர சிசிச்சையின் மூலம் கல்ஒன்று அகற்றப் பட்டது.

சிறதுகாலம் ஓய்வெடுத்து விட்டே அவர் இலங்கை திரும்புவார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (இ)

## ஆய்வரங்கு

(மன்னார்)

மன்னார்—வவுனியா மறைமாவட்டத்தின்எதிர்காலத்தை நிர்ணயிக்க உதவும் வகையில் பெப்ரவரி மாதம் 4ம் திகதி தொடக்கம் 7ம் திகதிவரை மடுத்திருப்பதியில் மன்னார் மறைமாவட்ட ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் தலைமையின் கீழ் ஆய்வரங்கு நடைபெறவுள்ளது.

திருச்சபையின் மேய்ப்புப் பணி, பொது நிலையினர், குடும்பம், மனிதமுன்னேற்றம் கல்வி, இளைஞர்பணி, ஆகிய தலைப்புக்களின்கீழ் ஆய்வரங்கு நடைபெறுமென வவுனியா பங்குத்தந்தை அருட்திரு அல்பர்ன் இராஜசிங்கம் தெரிவித்தார்.

வவுனியா — மன்னார் மாவட்ட பங்கு பிரதிநிதிகளும், குருமார்களும் பங்கு பற்றவுள்ளனர். (க)

## சோஷலிச நாடுகளின் திரைப்பட விழா

(கொழும்பு)

கொழும்பிலுள்ள சோவியத் கலாச்சார இல்லத்தில் இம்மாதம் 18ந் திகதி ஆரம்பமாகிய சோஷலிச நாடுகளின் திரைப்படவிழா இம்மாதம் 29ந் திகதிவரை நடைபெறவுள்ளது.

இத்திரைப்படவிழாவில்சோஷலிச நாடுகளான சோவியத் யூனியன், செக்கோஸ்லாவியா பல்கேரியா. போலந்து. வியட்னும், கி. ஜெர்மனி ஹங்கேரி ஆகிய நாடுகளின் திரைப்படங்கள் காண்பிக்கப்பட்டு வருகின்றன. (கி)

### மாவட்ட அபிவிருத்திச் சபை

# இவ்வருடம் திட்டங்களை துரிதமாகச் செயல்படுத்தும்

(வண்ணார்பண்ணை)

யாழ்ப்பாண மாவட்ட அபிவிருத்திச் சபை இவ்வாண்டு முதல் செயல்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ள திட்டமிட்டுள்ளது. காலத்தை வீணடிக்காது மாவட்ட அபிவிருத்தியில் முடிந்தளவு முன்னேற்றத்தைக் கொண்டுவர துரித செயல் திட்ட முறைகளைக் கையாள்வதற்கு அபிவிருத்திச்சபை நடவடிக்கை எடுத்துள்ளதாக யாழ். மாவட்ட அபிவிருத்திச்சபை செயற்கமிட்டி உறுப்பினரும், தமிழர் விடுதலைக் கூட்டணி நிர்வாக அமைப்பு முக்கியஸ்தருமான திரு. மு. தம்பிமுத்து தெரிவித்தார். கடந்த ஆண்டு அபிவிருத்தி நினைத்தளவு முன்னேற்றத்தைக் காண அபிவிருத்திச்சபையால் முடியாத போதும், இவ்வாண்டு முதல் வேலைத்திட்டங்களையும், அபிவிருத்தி நடவடிக்கைகளையும் முடிந்தளவு துரிதப்படுத்தவும், செயல்படுத்தவும் அபிவிருத்திச்சபை முயல்வதாகவும் அவர் தெரிவித்தார்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் இயக்க வேலைகளுக்கு தற்காலிக அலுவலகம் ஒன்றை இயங்கவைக்க நடவடிக்கை எடுத்துவருவதாகவும், நிரந்தரமான அலுவலகமொன்றை நிறுவ காணி ஒன்றைப் பெற்றிருப்பதாகவும், இதற்கான கட்டிட வேலைகள் பற்றி ஆராய்ந்துவருவதாகவும் திரு. தம்பிமுத்து தெரிவித்தார்.

## 'வயதுவந்த பெண்களை கண்டபடி வெளியே விடாதீர்'

### நீதவான் பெற்றோருக்கு அறிவுரை

(யாழ்ப்பாணம்)

வயதுவந்த பெண் பிள்ளைகளை கண்டபடி வெளியிடங்களுக்கு நடமாட விடக்கூடாது' என்று யாழ். நீதிவான் ரி. ஜோகநாதன் பெற்றோருக்கு எச்சரிக்கை செய்துள்ளார்.

யாழ்ப்பாணித்திலுள்ள ஒரு ஹோட்டல் ஒன்றில் சந்தேகத்துக்கிடமான முறையிலிருந்த ஒரு ஆணையும் இளம் பெண்ணையும் யாழ் பொலிசார் கைது செய்து யாழ். நீதிமன்றத்தில் நீதவான் முன்னிலையில் நேற்று ஆஜர் செய்தனர்.

ரோந்து சுற்றிவந்த பொலிசாருக்கு இரகசியத் தகவல் ஒன்று கிடைத்ததன் பேரில் ஹோட்டல் அறையொன்றில் சோதனையிட்ட பொழுதே இவர்களிருவரும் இருக்கக்கண்டுபிடிக்கப்பட்டனர்.

இருவரும் முல்லைத்தீவைச் சேர்ந்தவர்கள், ஒன்றுவிட்ட சகோதரர்கள் என்றும், இதற்குமுன்பும் இரு தடவை யாழ்ப்பாணம் வந்திருக்கிறார்கள் என்றும், தனது சகோதரியின் மகனை இவர் ஒரு குடும்பஸ்தன் என்றும் கைது செய்யப்பட்ட இளம் பெண்ணின் தாயார், நீதிவானுக்கு தெரிவித்தார்.

நீதவான், இனிமேல், இப்படி வயதுவந்த பெண்பிள்ளையை நடமாடவிடக்கூடாதென்றும், குடும்பஸ்த்தனை நீர் இப்படியான தொடர்புகள் வைத்திருக்கக்கூடாதென்றும் எச்சரிக்கை செய்து இருவரையும் விடுதலை செய்தார்.

### சவூதி அரேபிய பொருட்காட்சி

# யாழ். மாணவர், இளைஞரின் ஆக்கங்களுக்கு வாய்ப்பு

### கீல் நகர மேயர் யாழ். மேயருக்கு கடிதம்

(யாழ்ப்பாணம்)

சவுதி அரேபியாவின் நகரான கீல் மாநகரத்தில் மார்ச் மாதம் நடைபெறவிருக்கும் பொருட்காட்சிக்கு, யாழ்ப்பாணத்தில் கலையார்வம்மிக்க இளைஞர்களும், சிறுவர்களும் தங்களது திறமையை வெளிக்காட்டும் கலைப் பொருட்களை அனுப்பிவைக்குமாறு யாழ். முதல்வர் திரு. இராஜா விஸ்வநாதன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கலைப் பொருட்களை கீல் மாநகர் முதல்வர் திரு. கார்ல் ஹெயின்ஸ்லூக்காட்டுக்கு அனுப்பிவைக்குமாறும் அவர் கேட்டுள்ளார்.

கீல் வாரத்தின் நூற்றாண்டு விழாக் கொண்டாட்டங்கள் தொடர்பாக, கீல் நகர முதல்வர், அந்நகரின் ஓவியரான திரு. பீற்றர் நாகல் என்பவரின் ஓவியங்களுடன் யாழ். முதல்வர் திரு. இராஜா விஸ்வநாதனுக்கு நல்வாழ்த்துக்களை அனுப்பிவைத்துள்ளார்.

யாழ்ப்பாண நகரின் சிறுவர்களால் அல்லது இளைஞர்களால் வடிவமைக்கப்பட்ட வளைவுகள், செதுக்கல்கள், ஓவியங்கள், உருவங்கள் ஆகியவற்றை இவ்வைபவத்தைக் கொண்டாடுவதற்கு பொருத்தமான வாழ்த்துக்களை யாழ். நகரிலிருந்து அனுப்பிவைக்குமாறும் யாழ். முதல்வரைக் கேட்டுள்ளார்.

இதுபோன்ற வேண்டுகோள்கள், உலக நகரங்கள் அனைத்துக்கும் அனுப்பப்பட்டிருப்பதால், கீல் நகரின் முதல்வரின் வேண்டுகோளுக்கு அமைவாக ஏற்கனவே அநேக நகரங்கள் வெகு அற்புதமான கலைப் பொருட்களை அனுப்பிவைத்திருப்பதாகவும் கீல் நகர் முதல்வர் தகவல் தெரிவித்துள்ளார்.

நம்பிக்கையான நவநாகரிக தங்க வைர நகைகள் வேண்டுமா?

பொ. அம்பலவாணர்

தங்க, வைர நகை வியாபாரம்

119, கஸ்தூரியார் ரோட், யாழ்ப்பாணம்.
போன்: 7199. தந்தி: வைரம்.

## நீதிமன்ற உத்தரவை மீறியவர் றிமாண்டில்

(யாழ்ப்பாணம்)

நீதிமன்ற உத்தரவை மீறிய ஒருவர் நீதிமன்றப் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டு றிமாண்டில் வைக்கப்பட்டுள்ளார்.

வீட்டுப் பிரச்னை சம்பந்தமாக சுல்தான் மொஹிதீன் ஜமீன் என்பவர் ஹச்சு முகமட் சுபைர் என்பவருக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு யாழ். நீதிமன்றத்தில் நடைபெற்றது.

யாழ். நீதவான் திரு. ரி. ஜோகநாதன் நேரில் வழக்கு சம்பந்தப்பட்ட வீட்டைப் பார்வையிட்டுவிட்டு, இருபகுதியினரையும் இருந்த மாதிரி இருக்கும்படி உத்தரவிட்டிருந்தார். இந்த உத்தரவை மீறி வழக்காளி இருக்கும் வீட்டின் ஒரு பகுதியை எதிரி சேதப்படுத்தினாராம்.

இதுபற்றி நீதவானின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டதைத் தொடர்ந்து, நீதிமன்றப் பொலிஸ் சார்ஜன்ட் எஸ். மாணிக்கவாசகரையும், பொலிஸ் கான்ஸ்டபிள் கந்தசாமியையும் அந்த இடத்துக்குச் சென்று பார்வையிடும்படி நீதவான் நேற்றுப் பணித்தார்.

பொலிசார் இருவரும் உடனே அந்த இடத்துக்கு நேரில் சென்று பார்வையிட்டு வீடு உடைக்கப்பட்டிருந்ததாக நீதவானுக்குத் தெரிவித்ததைத் தொடர்ந்து, எதிரியை அடுத்தமாதம் 5ம் திகதிவரை றிமாண்டில் வைக்கும்படி நீதவான் உத்தரவிட்டார். (மா)

# ரெக்ஸி கலர் டி. வி. க்கு

## விற்பனையாளர்கள் தேவை

**சி. டபிள்யூ. மக்கி அன்ட் கோ லிமிட்டெட் ஸ்தாபனத்தாருக்கு**

ரெக்ஸி 16'' கலர் டி. வி. களை விற்பனை செய்ய இலங்கை பூராவுமுள்ள பிரசித்திபெற்ற விற்பனையாளர்கள் தேவை.

கடிதமூலம் தொடர்பு கொள்ளவும்

அல்லது

கீழ்க்காணும் விலாசத்துக்கு நேரில் விஜயம் செய்யவும்

**சி. டபிள்யூ. மக்கி அன் கோ. லிமிடெட்**

**36, டி. ஆர். விஜேவர்தன மாவத்தை,**
**கொழும்பு - 10**
தொலைபேசி: 34446—9

அல்லது

**111, ஸ்ரீ விக்கிரம மாவத்தை,**
**மட்டக்குளி, கொழும்பு - 15.**
தொலைபேசி: 5y1609

2072




# சி. டபிள்யூ. மக்கி அண்ட் கம்பனி லிமிட்டெட் தரும் சர்வதேச மதிப்புப் பெற்ற ரெக்ஸி கலர் டி.வி. ரூபா 8950/= மட்டுமே

உயர்ரக டெக்கா டி. வி. இறக்குமதி செய்த சி. டப்ள்யூ. மக்கி அன்ட். கோ. லிமிட்டெட் சீலிய காலத்துக்கே. இதோ ஒரு அரிய சந்தர்ப்பம் அளிக்கிறார்கள். அதுதான் 40 செ. மீ. அகல ஸ்கிறீன் சுப்பர் கலர் ரெக்ஸி டி. வி. ரூபா 8950/- மட்டுமே.

1 வருட உத்தரவாதம். விற்பனைக்குப் பிந்திய சேவையைப் பின்னணியாகக் கொண்டது.
● புதுமையான திருகள். சட்டென இயக்கி முழுவர்ணப் படத்தை உடனே பிரதிபலிக்கும்
● தன்னியக்க ஒளிச்சுற்று எம். எஸ். ஐயுடன் சேர்ந்து இயங்குகிறது.
● 8 தள்ளு பட்டன்களுடன் கூடிய மின்னியக்க சுற்று அமைப்பு.
● வீடியோ கசற் ஒளிப்பதிவுக்கான விசேட ஏ. வி. பட்டன்.
முழுமையாகச் சீதோஷ்ண நிலைக்கேற்றவாறு தயாரிக்கப்பட்டது.

உங்கள் பணவசதிக்கேற்ப கட்டுப்பண கொள்வனவு உண்டு. முன்னொருபோதும் கலர் டி. வியில் பார்த்து அனுபவித்திராத தெளிவான ஒளிநயம், இயல்பான காட்சி வளம் உண்டு.

கிடைக்கும் காட்சி அறைகள்:-
**சி. டப்ள்யூ மக்கி அன்ட். கோ. லிமிட்டெட்**
36, டி. ஆர். விஜேவர்த்தன மாவத்தை, கொழும்பு 10.
தொலைபேசி:- 34446 - 9. அல்லது
111, ஸ்ரீ விக்கிரம மாவத்தை, மட்டக்குளி. தொலைபேசி: 591609





# "எதிரியின் கையில் கத்தி இருக்கவில்லை"

## கைலாசபிள்ளையார் கோவிலடி கொலை வழக்கில் சாட்சியம்

(யாழ்ப்பாணம்)

சம்பவவேளையில் தாம் இரு கிறிஸ்கத்திகளைக் கண்டதாகவும் ஆனால் அவை எதிரியின் கையிலிருக்கவில்லையென்றும் வேறொருவரின் கையிலிருந்ததாகவும் வேறொருவரையும் பொலிசார் கைது செய்ததாகவும் கைலாசபிள்ளையார் கோவிலடிக் கொலைவழக்கில் எதிரிதரப்புச் சட்டத்தரணி ஜிம்மி இராஜரத்தினத்தின் குறுக்கு விசாரணையின் போது சாட்சியமளித்த அன்டன் ஜோசப் தெரிவித்தார். இவ்வழக்கு யாழ், நீதிமன்றத்தில் நீதவான் திரு. ரி. ஜோகநாதன் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது. சட்டத்தரணியின் குறுக்கு விசாரணையின் போது சாட்சி கூறியவை வருமாறு:

சட்டத்தரணி: இறந்தவர் எதிரியைப் பேசிய பொழுது கருணாகரன் அதற்கு ஆட்சேபனை தெரிவித்தாரா — எனக்குத்தெரியாது.

சட்: இறந்தவர் எதிரியைத் தாக்கிய பொழுது கருணாகரன் தடைசெய்தாரா — எனக்குத் தெரியாது.

சட்டத்தரணி; எதிரிக்குத் தம்பிமார் இருப்பது தெரியுமா? — எதிரிகளைப் பொலிசார் பிடித்தபின் தான் ரமேஷ் எதிரியின் தம்பிஎன அறிந்தேன்; அவர் கையில் கத்தி இருக்கவில்லை,

சாட்சி தொடர்ந்து கூறியதாவது: நான் எனது வாக்கு மூலத்தில் எதிரியின் தம்பிமார் இருவர் சம்பவம் நடந்த இடத்தில் நின்றார்கள் என்றும் இருவரின் கையில் கத்தியிருந்ததாகவும் கூறவில்லை. எதிரி தம்பியாருடைய கையிலிருந்த கத்தியை வாங்கிச் செருகினார், செருகியிருப்பதையும் கண்டேன் பின்பு கத்தியை வெளியில் எடுக்கும் பொழுதும் கண்டேன். அதன் கைப்பிடியைக்காணவில்லை. அதுகிறிஸ்கத்திமாதிரி இருந்தது. கிறிஸ் கத்திதான்.

டும்பதினம் மாலை 5.30 மணியளவில் இறந்தவர் வீட்மக்கு நான் செல்லவில்லை.

மாட்டீன்றோட் சந்திக்கு மனோகரனும் பாபுவும் எப்படி வந்தார்கள் என்று தெரியாது மனோகரன் பாபுவிடம் சைக்கிள்கள் இருப்பதாக எனக்குத் தெரியாது,

''நான் சந்திக்குச் செல்லும் பொழுது அவர்கள் வந்து நின்றார்கள்.

அன்று வேலுப்பிள்ளை வீட்டுக்குச்சென்று சாராயம் குடிப்போம் என்று தீர்மானித்தோம்.

நான் சிகரட்பிரச்னையில் ஈடுபடவில்லை. எதிரியை எனக்குத்தெரியாது.

சட்டத்தரணி: நீர் சிகரட் பிரச்னையில் ஈடுபடவில்லை. எதிரியைத் தெரியாது. இருந்தும் அன்றுநீர் கைலாசபிள்ளையார் கோவிலடிக்குச் சென்றது எதிரிக்கு எதிராக தீட்டிய சதியின் பிரகாரம்— இல்லை.

சட்டத்தரணி எதிரி தனது தம்பியாரிடமிருந்து கத்தியை வாங்குவதற்குமுன் மகேந்திரனும் இறந்தவரும் எதிரியைத் தாக்கிவிட்டார்கள். மகேந்திரன் தள்ளிவிட்டார்.

சட்டத்தரணி அப்படியிருந்தும் எதிரி கத்தியை வாங்கி உடனே குத்தவில்லை உடனே செருகிவிட்டார்? ஆம்.

சட்டத்தரணி: சம்பவம் நடந்த இடத்தில் யார் நின்றது? நாங்கள் ஒருபுறமும் எதிரியின் இருதம்பிமார் மறுபுறமாக நின்றார்கள். மற்றவர்கள் கல்லால் எறிந்தனர்

சட்டத்தரணி: யாருக்கும் காயம் ஏற்பட்டதா? — எங்களில் ஒருவருக்கும் கல்லெறி ஒன்றும் படவில்லை. எங்களில் ஒருவருக்கும் காயமில்லை.

சட்டத்தரணி; எதிரியின் பேத்தியாகிய செல்லமுத்துவுக்கு காயம் ஏற்பட்டதா? —தெரியாது.

சட்டத்தரணி: உமது கடை எங்கே இருக்கிறது? எனது தேநீர்க்கடை குருநகர் கடற்கரை வீதியில் உள்ளது. நடத்துவது நான். எனது அம்மா பெயரில் பதிவு செய்யப்பட்டது.

சட்டத்தரணி: கடையில் எத்தனைபேர் இருக்கிறார்கள்? எனது கடையில் வேலைக்கு 2,3 பேர் இருந்தார்கள் சம்பதினம் பிற்பகல் கடைதிறக்கப்பட்டிருந்தது.

சட்டத்தரணி: நீரும் மகேந்திரனும் இன்னும் சிலரும் 30—7—81 4 30 மணியளவில் இறந்தவர் வீட்டுக்குச் சென்று அவரை அழைத்து வரவில்லை —இல்லை.

சட்டத்தரணி: பின்பு உம்மை வேலுப்பிள்ளைவீட்டுக்கு கூட்டிச்சென்று சாராயம் வாங்கித்தந்ததுயர்? — மனோ

கொலையுண்டவரின் மனைவியும் சாட்சியமளித்தார்.

(மா அ)

# வெள்ளை அறிக்கை விவாதம் பெப். 9வரை ஒத்திவைப்பு

(கொழும்பு)

கல்வி வெள்ளை அறிக்கை பற்றி பாராளுமன்றம் நேற்று முன்தினம் ஆராய்ந்தபோது அது தொடர்பாக எதுவித தீர்மானமும் எடுக்கப்படவில்லை.

இவ் வறிக்கையை பாராளுமன்றம் பெப்ரவரி 9ம் திகதி கூடி மீண்டும் ஆராயவுள்ளது.

(வெ)

# அபிராமிப்பட்டர் விழா

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானத்தில் இன்று மாலை அபிராமிப்பட்டர் விழா நடைபெற விருக்கிறது. நூறு பாடல்களுடன் தீபங்காட்டி நூறு விளக்குகள் ஏற்றி விசேட பூசைகள் இடம்பெற்று அம்பாள் எழுந்தருளுவார்.

(க)

# நூல்நிலைய சேவை

[சுழிபுரம்]

சுழிபுரம் கிராம உப அலுவலகத்திற்கு அருகாமையில் இயங்கிவரும்வாசிகசாலை, நூல்நிலையம் ஆகியஇரண்டும் வரியிறுப்பாளர்களுக்கு சிறந்த சேவையை செய்து வருகின்றன. தினமும் இரவு எட்டு மணி வரையும் வாசிகசாலை திறந்திருப்பதால் பலருக்கு ஆறுதலாக பத்திரிகை வாசிக்க வாய்ப்பாகவுள்ளது. சபையின் உப அலுவலக மேற்பார்வை அதிகாரியாக பணிபுரியும் உதவி அரசாங்க அதிபர் திரு சு. சண்முகசுந்தரத்தின் பணியை வரியிறுப்பாளர் பாராட்டியுள்ளனர்.

# அரசில் உள்ளோர் விரும்பியபடி 30 ஆயிரம் ஆசிரியர் நியமனம்!

## இதன் மூலம் நாட்டைப் பாழாக்கிய அரசு ராஜினுமாச் செய்யவேண்டும்

(கொழும்பு)

இன்றைய அரசு பதவிக்கு வந்த பின்னர் கடந்த மூன்று வருடங்களில் 30 ஆயிரம் ஆசிரியர்களை முறையற்ற விதத்தில் நியமனம் செய்ததன் மூலம் இந்த நாட்டை அரசு பாழாக்கிவிட்டது. அரசிலுள்ள ஒவ்வொருவரும் தமது விருப்பப்படி தகுதி இல்லாதவர்களுக்கு எல்லாம் ஆசிரிய நியமனங்களை வழங்கியுள்ளனர். இந்த ஆசிரியர்கள் மூலம் மாணவர்களுக்கு உரிய முறையில் கல்வி வழங்கமுடியாமல் உள்ளது இதற்காக அரசு உடனடியாக ராஜினுமாச் செய்ய வேண்டும்.

தமிழ் பாடசாலைகளை தனியான பிரிவின் கீழ் நிர்வகிக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் தனியான கல்விச் சேவை ஆணைக்குழுவிடம் தமிழ்பாடசாலைகள் ஒப்டைக்கப்படவேண்டும்.

இவ்வாறு ஊர்காவற்துறை எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம் நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் கல்வி வெள்ளை அறிக்கை மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் கூறினர்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

இன்றையஅரசு முதலாளித்துவக் கொள்கையை வளர்த்து வருகிறது.

இதத்கு வாய்ப்பாக முதலாளித்துவக் கல்வித்திட்டத்தை இன்று தயாரித்துள்ளது.

### ஆசிரியர் நியமனத்துக்கு அரசிடம் பணம் இல்லை

ஆசிரியகளை நியமிக்க அரசிடம் பணம் இல்லை. ஏன் இந்த வெள்ளை அறிக்கையை அமுல் செய்யக்கூட பணம் இருக்குமோ தெரியாது.

தமது ஆட்சிக் காலத்தின் கடைசிக்கட்டத்தில் அரசு இந்த வெள்ளை அறிக்கையைக் கொண்டுவந்துள்ளது. இந்த அரசு இன்னும் ஒருவருடம் கூட நீடிக்குமோ தெரியாது. இந்நிலையில் இங்கு வெள்ளை அறிக்கை மூலம் தான் செய்ய விரும்புவதைச் செய்ய முனைகிறது.

8 ம் வகுப்பு வரை சகல மாணவர்களுக்கும் சமகல்வி அளிக்க அரசு கடமைப்பட்டுள்ளது இல்லையேல் அது ஒரு சாராருக்குத் துரோகம் இழைக்கும் நடவடிக்கையாகும்.

### தனியார்துறையிடம் தொழில் முன்னிலைக்கல்வி

தனியார் துறையிடம் தொழில் முன்னிலைக் கல்வியை ஒப்படைக்க இருப்பதாக வெள்ளை அறிக்கை கூறுகிறது. இந்நடவடிக்கை மூலம் பணககாரர்களுக்கே அரசு வாய்ப்பளிக்கிறது.

இன்றைய கல்வித்திட்டத்தின் மூலம் 99 வீதமாணவர்கள் ஆங்கிலத்தேர்ச்சி யின்றி பல்கலைக்கழகம் புகமுடிந்தது. வெள்ளை அறிக்கை மூலம் அந்த வாய்ப்பை மாணவர்கள் இழக்கிறுர்கள்.

3 ம் வகுப்பு முதல் ஆங்கிலம் கட்டாயமாக படிப்பிக்க வேண்டும் என்ற சட்டம் ஏற்கனவே இருந்து வருகிறது. ஆனுல் இச்சட்டத்தின்படி கிராமப்புறப்பாடசாலைகளில் ஆங்கிலக் கல்வி கற்பிக்க போதிய ஆசிரியர்கள் இல்லை. கடந்த 30 ஆண்டுகளாகத் தீர்க்கமுடியாத இப்பிரச்னை இன்னும் 30 ஆண்டுகள் சென்ருலும் தீர்க்கமுடியாது.

(ம இ)

## இறந்தும் இறவாதவர்

உலகில் பிறப்பவர்கள் இறப்பது நிட்சயம். ஆனுல் ஒரு சிலர் இறந்தும் இறவாதவர்களாக மக்கள் ஞாபகத்தில் என்றும் திகழ்ந்து விடுகின்றனர், மண்டைதீவுக் கிராமத்தைப் பொறுத்தவரையில் அமரர் தனஞ்செயனின் மறைவு அவரை அழிக்கவில்லை என்று சொல்லலாம். இன்று அவரது இடைவெளி எங்கும் எதிலும் தெரிகிறது.

இக்கிராமத்தில் உருவத்தால் மட்டும் இவர் மிகப் பெரியவர் அல்ல, உள்ளத்தாலும் பெரியவராக எல்லோரும் புகழ வாழ்ந்தவர். உண்மையை உள்ளபடி சொல்ல வல்லவர்கள் குன்றிவரும் இக்காலத்தில் இவரது இழப்பு இச்கிராமத்திற்கு பேரிழப்பெனலாம். தனது அறிவை சரியான வழியில் பயன்படுத்த வேண்டும் என்ற இலட்சியத்தில் வாழ்ந்த இவர் கேள்விக் கதைகளுக்கு செவிமடுக்காது தன் நெஞ்சுணர்ந்து சரியானதைப் பேசும் தத்துவார்த்தம் நிறைந்தவாரக விளங்கியவர். அன்பிற்கும், நீதிக்குப் மட்டுமே அஞ்சிவாழ்ந்த இவர் இக்கிராமத்தின் நடுநிலைவாதிகளில் தலைசிறந்தவராக திகழ்ந்தவர். இக்கிராமத்தின் அபிவிருத்திக்கும், முன்னேற்றங்களுக்கும் பாகுபாடின்றி ஆதரவும் ஒத்துழைப்பும் நல்கி வந்த இவர் பொதுஸ்தாபனங்களுக்கு கூசாமல் நன்கொடைகளையும் வழங்கி வந்தவர்.

சமயதத்துவங்களை உணராமல், சமயக் குறிக்கோள்கள் தெரியாமல் மதப்பிரமுகர்களாக நடித்து வாழ்ந்து கொண்டிருப்பவர்கள் மலிந்துள்ள இக்காலத்தில் இவரது இழப்பு ஆலய நிர்வாகிகளுக்கும், ஆலய வழிபாட்டு, உற்சவ நிகழ்ச்சிகளுக்கும் இக கிராமத்தைப் பொறுத்தவரையில் பெருநஷ்டமாகும். இந்த இடத்திலும் இவரது இடைவெளி இன்று தெரிகிறது. பதவிகளைத்தேடி இவர் அலைந்தது கிடையாது இவரைத் தேடிப் பதவிகள் செல்வதுண்டு. இது இவரது தனிச் சிறப்பு எனலாம்.

சமூக சேவையில் தனது கிராமத்தை மட்டும் இவர் நேசிக்கவில்லை அயல் கிராமங்களையும் நேசித்தவர். தீவுப் பகுதியின் அபிருத்தியைக் கருத்தில் கொண்டு 1976ம் ஆண்டு தீவுப்பகுதி அபிவிருத்திச் சபை ஒன்றை பல பிரமுகர்கள் ஆரம்பித்தபோது அதன் உபதலைவர்களில் ஒருவராக போட்டியின்றி ஏகமனதாக தெரியப்பட்ட சிறப்பு இவருக்கு உரியது,

1976ம ஆண்டு மண்டைதீவு மறுமலர்ச்சி இயக்கம், மண்டைதீவு கண்ணகி அம்மன் ஆலய பொங்கல் உற்சவத்தை முன்னிட்டு உற்சவ மலர் ஒன்றை வெளியிட்டது. அந்த மலரை வெளியிடத் தூண்டியவராக மட்டுமல்ல, அந்த அம்பாள் ஆலய வரலாற்றையும், அம்பாள் ''காப்பு அகவலையும்'' எழுதி அம்மலரைச் சிறப்புறச் செய்ததை எவரும் பாராட்டாமல் இருக்க முடியாது. அந்த ஆலயப்பணியில் பக்தர்களுக்கு காப்புக்கட்டும் புனித சேவை என்றும் மறக்க இயலாதது.

எந்த அரசியல் கட்சியின் கூட்டம் என்ருலும்சரி, வேறு எந்த பொதுவைபவங்கள் என்ருலும் சரி முன் வரிசையில் நிலத்தில் அமர்ந்து காட்சி கொடுக்கும் அந்த உருவத்தின் இடைவெளியை நிரப்பும் மனப்பக்குவம் இனி இங்கு யாருக்கும் இருக்க முடியாது. நல்லதைச் செய்பவர்களை நாடிச் சென்று உதவும் பண்பு இவரிடம் மலிந்து கிடந்தது.

இக்கிராமத்தில் எந்தப் படிப்பகங்களுக்குச் சென்ருலும் எல்லா தமிழ்த் தினசரிப் பத்திரிகைகளையும் பார்க்க முடியாது. ஆனுல் இவரது இல்லத்திலும் சகல தமிழ்த் தினசரிகளையும் எந்த நேரத்திலும் எவரும் பார்க்கும் வசதி இறுதிவரை இருந்தது. தனக்குத் தெரிந்ததை மற்றவர்களும் அறியவேண்டும் என்ற சிறப்பு மனம் நிறைந்தவராக இவர் திகழ்ந்தவர். இவரது நல்ல சேவைகளையும், நற்பண்புகளையும், இக்கிராம மக்கள் மறக்க முடியாது.

சி. பாலசிங்கம்

## கட்டுப்பாடற்ற

(2 ம் பக்கத் தொடர்ச்சி)

சமீப காலத்தில், இந்நாட்டில் நடந்த சரித்திரச் சம்பவங்கள் தமிழ்மக்கள் மத்தியில் தேசிய உணர்வுகள் ஆழமாவதற்குப் பெருமளவு வழி வகுத்துள்ளதென்பதை யாரும் உதாசீனம் செய்யமுடியாது.

### இராணுவம் யு என் பி, பிரசாரக்கூட்டம் நடத்தியது

கூழாங்குளம் என்ற கிராமத்தில் சில கிராமவாசிகளுடன் இராணுவமும் பொலிசாரும் யு. என். பி. பிரசாக்க் கூட்டமொன்றை நடத்தியதாகக் கூறப்படுகிறது. அக்கூட்டத்தில் காந்தீயத்தை அவமதிக்கும் விதத்தில், கைகளை உயர்த்திக் காந்திய நிலையங்களை எரிப்பதற்கு ஆதரவு தெரிவிக்குமாறு கேட்கப்பட்டார்கள். துப்பாக்கிமுனையில் பயமுறுத்தப்பட்டார்கள்.

இந்நாட்டின் ஆயுதப்படையினருக்கும், பொலிசாருக்கும் அரசினுல் கொடுக்கப்பட்டுள்ள கட்டுப்பாடற்ற அதிகாரங்களை நிறுத்துவதற்கு இந்நாட்டில் நீதிக்காகப் போராடும் தலைவர்களும். ஸ்தாபனங்களும் தமது குரலை உயர்த்திப் போராடுவார்கள் என்ற நம்பிக்கையில் இந்த அறிக்கையை விடுக்கின்ருேம்.

இந்த அறிக்கை, சகல அரசியல் தலைவர்களுக்கும் பொது ஸ்தாபனங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது, (க—இ)

## அமைச்சர்—

(2ம் பக்கத் தொடர்ச்சி)

அவர் அக்டோபர் 27ம்திகதி முதல்தான் கூட்டத்திற்கு சமூகம் தரவில்லை. அதிலிருந்து மூன்றுமாதம் நோக்குவதே சரி.

இந்நிலையில் திரு. இராசதுரையின் பதவி பறிபோகாத சூழ்நிலை ஏற்பட்டால் இம் மாதம் 15ம் திகதி நடைபெற்றவிசேட கூட்டம் அவருக்கு ஒரு வரப்பிரசாதம் என்று தான் அவரின் ஆதரவாளர்கள் கூறுகின்ருர்கள்.

இது இவ்வாறு இருக்க அபிவிருத்திசபைச் சட்டத்தில் தொடர்ச்சியாக மூன்று மாத காலம் என்பது தெளிவற்ற நிலையில் இருப்பதால் அதற்கு சட்டமா அதிபர்தான் விளக்கம் கொடுக்கவேண்டும்.

இந்நிலையில் இதற்கு விளக்கம் கொடுப்பதற்காக சம்மந்தப்பட்ட பிரிவில் திருத்தம் கொண்டுவரவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளதாம். எனினும் அபிவிருத்தி சபைக்குப் பொறுப்பான அமைச்சர் திரு. ஆர். பிரேமதாசா அமெரிக்காவிலிருந்து திரும்பும்வரை இது சாத்தியமாகாது.

இந்நிலையில் மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திசபையில் சர்ச்சைக்குரிய பிரச்னை எப்படித்தான் தீரப்போகின்றதோ? அவர் பதவிசால் உறுப்பினர் என்பதால் மீண்டும் அங்கத்துவம் பெறுவார். இதற்குச் சுமார் 3 மாதம் செல்லும். அதற்கிடையில் சபையில் தற்போது 4ஆக இருக்கும் ஐக்கிய தேசியக்கட்சி அங்கத்துவம் 3ஆகக் குறைந்துவிடும். இந்நிலையில் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு 3 அங்கத்துவம் உள்ளது. அப்போது சில தீர்மானங்கள் கொண்டுவரப்பட்டு, வாக்கெடுப்புக்கு வரும்போது சமவாக்கைப்பெறும் கூட்டணியின் தீர்மானம் தலைவரின் மேலதிக வாக்கினுல் நிறைவு பெறக்கூடும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## தை அமாவாசைத் தீர்த்தோற்சவம்

[மன்னர்]

திருக்கேதீஸ்வர திருத்தலத்தில் வருடாவருடம் அகில இலங்கை விஸ்வகர்மகுல சங்கத்தாரால் நடாத்தப்பெற்று வரும் தை அமாவசைத் தீர்த்தோற்சவம் இன்று ஞாயிற்றுக் கிழமை அதிகாலையில் நடைபெறவிருக்கிறது. பகல் அன்னதானம் நடைபெறவுள்ளது. மேற்படி சங்கத்தாரால் அங்கு அமைக்கப்பட்டுவரும் ''துவஷ்டா மன்னன் மணி மண்டப அரங்கில்'' சிறப்புச் சொற்பொழிவும் நடைபெறவிருக்கிறது. [ம]

## பொலிசில் சிக்கிய கொள்ளையர்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் பலஇடங்களில் கொள்ளை அடித்த இருவர், ரோந்து சுற்றிவந்து கொண்டிருந்த யாழ். பொலிசாரிடம் வகையாக மாட்டிக்கொண்டனர்.

இவர்களிருவரும் கைதுசெய்யப்பட்டதுடன் கொள்ளையடிக்கப்பட்ட பல ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

யாழ் பொலிஸ் நிலையக் குற்றத்தடுப்பு பிரிவைச் சேர்ந்த சப் இஸ்பெக்டர் குருப்பு, சார்ஜண்டுகள் தில்லன் துரை. இமானுவல். ஜேசுதாசன், பொலிஸ் கான்ஸ்டபிள் இரத்தினசபாபதி ஆகியோர் கொண்ட கோஷ்டி இரவு ரோந்து சுற்றிக்கொண்டிருந்த சமயம், குருநகரைச் சேர்ந்த ஜெரி, ஜோசேப் ஆகிய இருவரும் கொள்ளை அடித்த பொருள்களுடன் பொலிசாரிடம் மாட்டிக் கொண்டனராம். மேலும் விசாரணையின்போது, பல கொள்ளைஅடித்த பொருள்கள் கைப்பற்றப் பட்டுள்ளதாகவும் பொலிசார் தெரிவித்துள்ளனர், (மா)


# நியாய விலை

பாடசாலை உபகரணங்கள்,

அப்பியாச கொப்பிகள்,

மின்சார உபகரணங்கள்,

காகிதாதிகள் அனைத்தும்

## அம்பலவாணர் அன் சன்ஸ்

(இலங்கை தேசிய கடதாசிக் கூட்டுத்தாபன உத்தரவுபெற்ற வியாபாரிகளும், மின்சார ஒப்பந்தகாரரும், விற்பனையாளரும்)

**196, கே கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.**

(போன் : 8291 தந்தி : ''வாணர்சன்ஸ்''

(கடைத்தெரு பிள்ளையார் ஆலயத்திற்கு முன்பாக)

தலைமையகம் :

**பேர்ள்லெட்ஸ் - அம்பலவாணர் சன்ஸ்**

**78, மலிபன் வீதி, கொழும்பு 11.**

போன் : 24821 — 28244

**லெட்சுமிபவன்**

97, ஒல்ஹொட்மாவத்த, — — கொழும்பு - 11

## "கொடிகாமத்திலுள்ள இருபாடசாலைகளும் இணைவதால் இப்பகுதி மாணவர் பயனடைவர்'

### ஒன்றிணைப்பு விழாவில் 'நவம்'

(சாவகச்சேரி)

''இன்று இக்கிராமத்தின் சரித்திரத்தில் ஓர் பொன்னான தினம், கடந்த பல ஆண்டுகளாக இவ்விரு பாடசாலைகளுக்கிடையே போட்டி நிலவியது. பல இளைஞர்கள், பெற்றோர்கள் இப்பாடசாலைகள் பற்றி அடிக்கடி என்னோடு பேசுவார்கள். ஆனால் இன்று இப்பாடசாலைகளின் இணைப்பினால் கொடிகாமம், சாவகச்சேரி நகரம் போலப் புதுப்பொலிவுபெறும். தங்கள் போட்டிகளை மறந்து, முன்னேற்றம் கருதி இதில் செயற்பட்ட மக்கள் எல்லோரையும் நான் மனதாரப் பாராட்டுகின்றேன்.''

கொடிகாமம் அரசினர் திருநாவுக்கரசு மகாவித்தியாலய ஒருங்கிணைப்பு வைபவம் வித்தியாலயத்தில் நடைபெற்றபொழுது சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மகாவித்தியாலய அதிபர் திரு. கே. பேரம்பலம் தலைமையில் நடைபெற்ற வைபவத்தில் இரு பாடசாலைகளின் ஆசிரியர்கள், பொதுமக்கள், வட்டாரக் கல்வியதிகாரி திரு. சி. தியாகராசா, வித்தியாலய முன்னாள் அதிபர் பண்டிதர் பொன். கந்தையனார் உட்படக் கலந்துகொண்ட கூட்டத்தில் திரு. நவரத்தினம் எம். பி. தொடர்ந்து கூறியதாவது; :'இப்பாடசாலைகள் இரண்டும் கருத்துவேறுபாடுகளின்றி முறையாக இயங்கினால் இப்பகுதிப் பிள்ளைகள் கல்வி கற்க வெளியிடங்களுக்குப் போகவேண்டிய தேவை ஏற்படாது. மிகவும் கூடிய விரைவில் இம்மகாவித்தியாலயத்திலிருந்து மருத்துவபீடம், பொறியியல் பிரிவுகளுக்கு மாணவர்கள் தெரிவுசெய்யப் படுவார்களென்பது எனது நம்பிக்கை.''

அரசினர் பாடசாலையிலும் அதிபர் திரு. கே. பேரம்பலம் தலைமையில் கூடி, இரு பாடசாலைகளிலும் பாலர் வகுப்பு இருக்கவேண்டுமெனவும், மகாவித்தியாலயத்தில் இரண்டாம் வகுப்புச் சித்தியடைந்ததும், அப்பிள்ளைகள் அரசினர் கனிஷ்ட வித்தியாலயத்தில் கல்வி கற்றுத் திரும்பிப் பல்கலைக்கழகப் புகுமுக வகுப்புவரை திருநாவுக்கரசு மகாவித்தியாலயத்தில் படிக்கலாமெனவும் வகுக்கப்பட்டது.

கனிஷ்ட அதிபர் திரு. ஈ. சின்னத்தம்பி, திரு. சி. அம்பலவாணர், திரு. அ. திருநாவுக்கரசு ஆகியோரும் உரையாற்றினர். (க)


7 வது-மகளிர் வாரம்
ஹரன் யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
கமலஹாசன்—ஸ்ரீதேவி
நீல மலர்கள்



வெலிங்டன் மானிப்பாய்
தினசரி: 2.30 6.15 9. 30
பட்டாக்கத்தி பைரவன்


## "விசர்நாய்க் கடிநோய் தடுப்பு இயக்கத்திற்கு மக்கள் பூரண ஆதரவு'

### வைத்திய அதிகாரி தகவல்

(யாழ்ப்பாணம்)

விசர் நாய் கடிநோய் தடுப்பு இயக்கம், காங்கேசன்துறை சுகாதாரப்பிரிவில் கடந்த 18ம் திகதி ஆரம்பித்து வைக்கப்பட்டது. சுகாதார அலுவலகர்கள், நாய்களுக்கு விசர் நோய் ஏற்படாமல் தடுப்பு மருந்து கொடுத்துவருகிறார்கள்.

இதுபற்றிய விபரங்களுக்கு பொதுச் சுகாதார பரிசோதகர், பொது மருத்துவமாது, கிராம சேவகர், ஆகியோரிடம் தொடர்பு கொள்ளுமாறு காங்கேசன்துறை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் இ. தெய்வேந்திரன் தெரிவித்துள்ளார். பொதுமக்கள் பூரண ஒத்துழைப்பு வழங்கி வருவதாகவும் அவர்கூறினார்.

கீழ்க்காணும் சுகாதார பரிசோதகர் பிரிவுகளில் தொடந்து விசர் நாய் நோய் தடுப்பு மருந்து; வீட்டுநாய்களுக்குப் போடப்படும்.

25, 26 ஏழாலை, 27, 28 உடுவில், 29, 30 சுன்னாகம்; பெப்ரவரி 1. 2 அளவெட்டி, 3, 5 தெல்லிப்பளை, 6 சுன்னாகம்.

## தி. மு. க. தொண்டர்கள் உண்ணாவிரதம்

சென்னை. ஜன. 23

ஜனநாயகத்திற்கு விரோதமாக அ. தி, மு. க. அரசு நடந்துவருவதையும், பஞ்சாயத்து யூனியன்களின் தேர்தல்கள் ஒத்திவைக்கப்பட்டதையும் கண்டித்து தி. மு. க. தொண்டர்கள் நேற்று தமிழ்நாட்டிலுள்ள ஊராட்சிமன்ற அலுவலகங்கலின் முன்னால் உண்ணாவிரதமிருந்தனர். (வெ)

## இசைவிழா நிறையநிகழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் இராமநாதன் நுண்கலைக் கல்லூரியில் நடைபெறும் இராமநாதன் நுண்கலை கழக இசைவிழாவின் மூன்றாவது நாள் நிகழ்ச்சி விபரம் வருமாறு:

4.15—4.35 பாட்டு நா, யோகேஸ்வரி, சி. சீவரட்ணம் த. இராசேஸ்வரி, ஆ. வதனசோதி வயலின் ரி. திலகவதி மிருதங்கம், கே, விவேகானந்தன்.

4.35—4,55 பாட்டு வே, நிவேதிதா. இ. ரேசறி, இ, ரட்ணகுமாரி, பு. தேவகி, வயலின் ஆர். தெய்வீகசௌந்தரராணி, ஜே. ஷண்முகானந்த சர்மா மிருதங்கம்.

5.20—5.30 தலைமையுரை: யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன்,

5.30—6.15 வயலின் பாக்கியலஷ்மி நடராஜா, மிருதங்கம் எம். சிதம்பரநாதன், கஞ்சிரா ஜே. ஷண்முகானந்த சர்மா,

6.15—7.00வீணை ஏ. சத்தியசீலன், மிருதங்கம் என். சோமாஸ்கந்த சர்மா, கஞ்சிரா வி. ஜம்புநாதன்,

7.00—7.45 பாட்டு ஜெகதாம்பிகைகிருஷ்ணாநந்தசிவம், வயலின் ஞானம்பிகை பத்மசிகாமணி, மிருதங்கம் ஏ. எஸ். ராமநாதன், கடம் ரா. யோகராஜா.

7.45—8,30 பண்ணிசை தை. பரந்தாமன், வயலின் பாக்கியலஷ்மி நடராஜா, மிருதங்கம் என். சோமாஸ்கந்த சர்மா, கஞ்சிரா வி. ஜம்புநாதன்.


லிடோ தினசரி 4 காட்சிகள்
[யாழ்ப்பாணம்]
சுதாகர், ராதிகா நடித்த
அன்னப்பறவை



றீகல் தினசரி 10—30, 2—00, 4—30, 7—00, 9—30
(யாழ். நகர்)
Damnation Alley



ராஜா (யாழ். நகர்)
சரஸ்வதி [திருமலை]
தினசரி 4 காட்சிகள்
ரஜனிகாந்த்—ஸ்ரீதேவி—சக்கரவர்த்தி—லட்சுமிஸ்ரீ
தர்ம யுத்தம் (ஈஸ்ட்மன் கலர்)



வின்ஸர் தினசரி 4 காட்சிகள்
(யாழ். நகர்)
ரஜனிகாந்த், படாபட், தேங்காய் சீனிவாசன்
6 இருந்து 60 வரை
(புதிய பிரதி)


## சில்லாலை கொலை சந்தேகநபரை மனநோய் ஆஸ்பத்திரிக்கு அனுப்ப உத்தரவு

(மாவிட்டபுரம்)

சில்லாலை கொலைச் சந்தேக நபர், ஒரு மனநோயாளி என உறுதிப்படுத்தப்பட்டதால் அவர் மீது குற்றப்பத்திரம் தாக்கல்செய்யமுடியாத நிலையில் அவரை அங்கொடை மனநோய் வைத்தியசாலையில் சிகிச்சைக்குட்படுத்துமாறு மல்லாகம் நீதிபதி உத்தரவிட்டார்.

சில்லாலையைச் சேர்ந்த பிரான்சிஸ் சுகுணராஜா என்பவர் படுக்கையில் வைத்துக் கைக்கோடரியால் பலமுறை வெட்டப்பட்டுக் கொலைசெய்யப்பட்டிருந்த சம்பவம் தொடர்பாக அவரது மைத்துனர் ஜோசெப் சார்ள்ஸ் மரியான் என்பவரைப் பொதுமக்கள் பிடித்துக் காங்கேசன்துறைப் பொலிசில் ஒப்படைத்ததையடுத்து அவர் மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்பட்டு றிமாண்டில் வைக்கப்பட்டிருந்தார்.

சந்தேகநபர் ஒரு மனநோயாளியென்றும், 10 வருடங்களாக, அதற்காக அவர் சிகிச்சை பெற்றுவந்தாரென்றும், சம்பவம் நடந்த தினம் அவர் சரியான மனநிலையில் இருந்திருக்கவில்லையென்றும், அதுவே கொலைக்குக் காரணமாக இருந்திருக்கலாமெனவும் சந்தேகநபர் சார்பில் கடந்த தவணையின்போது மல்லாகம் நீதிமன்றத்தில் பிரஸ்தாபிக்கப்பட்டது.

இதனையடுத்து நீதிபதி திரு. சி. வி. விக்னேஸ்வரன் இவரை மனநோய் வைத்திய பரிசோதனைக்குட்படுத்துமாறு உத்தரவிட்டிருந்தார்.

மனநோய் வைத்திய நிபுணர் திரு. கணேஸ்வரன் இவரைப் பரிசோதித்து மல்லாகம் நீதிமன்றத்தில் அறிக்கை சமர்ப்பித்தார், சந்தேக நபருக்கு மனநோய் உண்டென்றும், இன்றுள்ள நிலையில் அவர் குற்றவாளியா? சுற்றவாளியா என்பதைக் கூறக்கூடியவராக இல்லையென்றும் அந்த அறிக்கை தெரிவித்தது.

இதனையடுத்து நீதிபதி இவரை அங்கொடை மனநோய் வைத்தியசாலையில் சிகிச்சைக்கு அனுமதிக்குமாறும், குணமடைந்த பின் குற்றப்பத்திரம் தாக்கல்செய்வது குறித்து ஆராயலாமெனவும் தெரிவித்தார்.

சந்தேகநபர் சார்பில் சட்டத்தரணி ஆர். ஜே. செல்வரத்தினம் ஆஜரானார்.

## நயினாதீவுச் சுவாமியார் குருபூசை

(நயினாதீவு)

நயினாதீவுச் சாமியார் தவத்திரு முத்துலிங்க சுவாமிகளின் 34வது ஆண்டு குருபூசை இன்று சனிக்கிழமை நயினாதீவிலுள்ள சுவாமிகளது சமாதிக் கோயிலில் நடைபெறவிருக்கிறது. பிரம்மஸ்ரீ ப. சோமஸ்கந்த குருக்கள் விசேட அபிடேக ஆராதனைகளை நடத்துவார். அடியார்களுக்கு அன்றையதினம் அன்னதானமும் வழங்கப்படும். (கி)

## கொள்ளைச் சந்தேக நபர்கள் இருவரில் ஒருவர் அடையாளம் காணப்பட்டார்

(மாவிட்டபுரம்)

குரும்பசிட்டி கொள்ளைச் சம்பவம் குறித்து அடையாள அணிவகுப்புக்குட்படுத்தப்பட்ட இருவரில் ஒருவர் அடையாளம் காணப்பட்டார்.

குரும்பசிட்டியைச் சேர்ந்த வி. சோமலிங்கம் என்பவரது வீட்டினுள் துப்பாக்கி மற்றும் பயங்கர ஆயுதங்களுடன் புகுந்த கொள்ளையர்கள் வீட்டுக்காரரை கட்டிவைத்து அங்கிருந்த 16 ஆயிரத்து 250 ரூபா பெறுமதியான நகை பணம் என்பவற்றைக் கொள்ளையடித்துச் சென்றிருந்தனர்.

இதன் பின் குரும்பசிட்டிப் பகுதியில் சந்தேகத்திற்கிடமாக நடமாடிய இருநபர்களை இரவு நேரத்தொண்டர்கள் அண்மையில் கைது செய்திருந்தனர்,

சின்னத்துரை வடிவேலு, குருசாமி அசோக்குமார் ஆகிய இவ்விருவரும் மேற்படி கொள்ளைச்சம்பவத்துடன் தொடர்புடையவர்களாக இருக்கலாம் என சந்தேகிக்கப்பட்டதால் மல்லாகம் ஆரம்ப நீதிமன்றத்தில் பதில் நீதிபதி ரி. தம்பிரத்தினம் முன்னிலையில் அடையாள அணிவகுப்புக்குட்படுத்தப்பட்டனர்.

அச்சமயம் கொள்ளை நடந்த வீட்டுக்காரப் பெண் லோகாம்பிகை முதலாவது நபரை மட்டும் அடையாளம் காட்டினார்.

அடையாள அணிவகுப்பையடுத்து இவர்கள் மல்லாகம் மாவட்ட நீதிபதி திரு. சி. வி. விக்னேஸ்வரன் முன் ஆஜர் செய்யப்பட்ட போது பெப்ரவரி 2ம் திகதிவரை றிமாண்டில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டனர். (அ)


சாந்தி (யாழ். நகர்) 10—30, 2—30, 6—15, 9—45
129வது வெற்றித் தினம்
கமல் ஸ்ரீதேவி குரு
பரபரப்பூட்டி காட்சியளிக்கும் கடைசி வாரம்!



ஸ்ரீதர் தினசரி: 10:30, 2:30, 6:15, 9:30
யாழ். நகர்
கமலஹாசன் ஸ்ரீதேவி (இருவேடம்) நடித்த
கல்யாண ராமன்
(புதிய பிரதி)



இன்னும் சிலதினங்கள் மட்டும்
மனோகரா (யாழ்ப்பாணம்)
தினசரி10—30, 2—30, 6—30, 9—30
சிவாஜி—கே. ஆர். விஜயா நடித்த
நான் வாழவைப்பேன்



ராணி (யாழ். நகர்) கடைசி 4 தினங்கள்
தினசரி 10.30, 2.30, 6.15 9.30
சிவாஜி லட்சுமி
தங்கைக்காக
29 முதல் உல்லாசப்பறவைகள்

# வரி விளம்பரம்

### விற்பனைக்கு

வசாவிளான் அச்சுவேலி வீதியில் 3½ பரப்புக் காணியுடன் கல்வீடு வளவு மின்சார வசதியுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும்: சி. இராசையா, ஆசிரியர் ''நிர்மலா'' அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி. 2038

கண்டி வீதி—கைதடிச் சந்தியிலிருந்து முந்நூறு யார் தொலைவில் மானிப்பாய் வீதியில் மூன்று பரப்பு காணி விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்க. இலக்கம்: 1593, 'ஈழநாடு' மே. பா., யாழ்ப்பாணம். 2048

16 பரப்பு நெற்காணி மானிப்பாய் தபாற்கந்தோர் ஒழுங்கையருகில், நிரப்பி வீடு கட்டமுடியும் விபரங்களுக்கு: செ. குமாரசுவாமி, பொம்பே கவுஸ், கே. கே. எஸ். வீதி, காலிங்கன் தியேட்டர் அருகே இணுவில். 2067

பொற்பதி வீதி, கொக்குவில் கிழக்கில் இரண்டு (2) பரப்பு வீடுகட்ட உகந்த காணி விற்பனைக்குண்டு. ச. குபேந்திரநாதன், இரும்புக்கடை, பலாலி வீதி, கோண்டாவில். 2064

மாங்குளம் துணுக்காய் வேட்டை அடைப்பில் 40 ஏக்கர் நெற்செய்கைக் காணியும் 10 ஏக்கர் மேட்டுக் காணியும் 45 அடி விட்டக்கிணற்றுடனும் தனியான குளத்துடனும் வீட்டு வசதிகளுடனும் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும் குயிக் ரவல்ஸ் அன்ரூர்ஸ், சரஸ்வதி பூங்கா, சாவகச்சேரி தொலைபேசி: 273. 2068

கம்பியூட்டர் புரொகிராமிங் வகுப்புக்கள் நடைபெறுகின்றன. எங்கள் நிறுவனத்திலுள்ள கம்பியூட்டர் இயந்திரத்தில் செய்கை முறைப் பயிற்சிகளும் (செய்முறை பயிற்சி) அளிக்கப்படுகின்றன. இருபாலாரும் கற்கலாம். புதிய வகுப்புக்கள் ஆரம்பம் 23-01 82. விபரங்களுக்கு: Auto Cool Engineers (சாந்தி தியேட்டருக்கு முன்பாக) கந்தப்பசேகரம் வீதி, யாழ்ப்பாணம். (2028)

33 ஸ்ரீ 3000 தொடர்பிலக்க ஒஸ்டீன் கேம்பிறிஷ் வான், ஹொன்டா C 90 மோட்டார் சைக்கிள்கள் விற்பனைக்கு உண்டு. நா. சாம்பசிவம், அன் கோ, 54, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம், (2039)

காங்கேசன்துறை சீமேந்துத் தொழிற்சாலை முன்றலில் அமைந்திருக்கும் குமாரகோவிலுக்கு முன்பக்கமாகவுள்ள புகையிரதப் பாதைக்கு அருகில் 14 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. விபரங்கட்கு; சி. சிவகுருநாதன் (குருநாதசுவாமி கோவிலடி, காங்கேசன்துறை) உடன் தொடர்பு கொள்ளலாம். 1999

EY 1584 இலக்க — A 40 கார் லெவின் மொடல் நல்ல நிலையிலுண்டு. நேரில் வரவும். சுஜாதா ஜுவலர்ஸ், 214, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 2062

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

### வகுப்பு

எயர் கொண்டிசனிங் அன் ரெப்பிறிஜிறேசன் செய்முறைப் பயிற்சிகளுடன் 1-2 82இல் வகுப்புகள் ஆரம்பம். Auto Cool Engineers (சாந்தி சினிமா முன்பாக) கந்தப்பசேகரம் வீதி, யாழ்ப்பாணம். (2026)

J. E. C.யின் புதிய—பழைய வகுப்புகள் அனைத்தும் 58, ஸ்ரான்லி வீதியிலுள்ள கட்டிடத்தில் நடைபெறும். (நாக விகாரைக்கு அருகில்) (2037)

விஞ்ஞான முறைப்படி உடை தயாரித்தல் (Scientific Cutting and Dress Making) மெஷின் பூ வேலை (Machine Embroidery) சிகை அலங்காரம் (Hair Style) சமையற்கலை (Cookery) ஆகிய வகுப்புக்கள் மாஜி சிங்கர் கம்பனி தையல் ஆசிரியையால் கீழ் வரும் விலாசத்தில் நடாத்தப்படும். ANITA SCHOOL, திருமதி பவளம் சிவசுப்பிரமணியம், 50, அரசடி வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். 2057

### பயிற்சி

விசேட ஒரு மாத எலக்றிக்கல் வயரிங் பயிற்சி, வெல்டிங் பயிற்சி 03—02—82 ஆரம்பமாகிறது. இன்ஸ்ரிரியூட் ஒவ் என்ஜினியரிங் ரெக்னொலொஜி, 9, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (2014)

### வாடகைக்கு

பல்கலைக்கழக, தொழில் நுட்பக் கல்லூரி மாணவர்களுக்கு சாப்பாடு வசதியுடன் கோண்டாவில் பொற்பதி வீதியில் இடமுண்டு. (பல்கலைக்கழகத்திலிருந்து 1½ மைல் தூரத்தில்) விபரங்களுக்கு: N. கனகசபை, அரசினர் வைத்தியசாலை, கோண்டாவில். 2060

யாழ். மாநகரசபை எல்லைக்குள் 5க்கு மேற்பட்ட அறைகள் கொண்ட சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு அல்லது குத்தகைக்கு தேவை. முழுவிபரத்துடன் தொடர்பு கொள்க: ஹரே கிருஷ்ண இயக்கம், 188, புதுச் செட்டித் தெரு, கொழும்பு—13. (2022)

### FOR SALE

English Pram with Carry-Cot in good condition Dr N. Kanagasabai, Govt Dispensary, Kondavil 2061

### WANTED

Graduate to teach Pure Maths & Applied Maths in A. L class. Apply giving particulars to: RECTOR, St Patrick's College, Jaffna. 2063

### WANTED

Wanted urgently English Speaking House maids and Welders. Contact: 64, Main Street, Jaffna. For more particulars 2066

## உள்ளக சுற்றுப் போட்டி

(அரியாலை)

யாழ்ப்பாணம் வை. எம். சி. ஏ. உள்ளகச் சுற்றுப் போட்டி, பெப்ரவரி மாதம் 11ந் திகதி தொடக்கம் 30ந் திகதிவரை நடைபெறவிருக்கிறது.

இந்த உள்ளகச் சுற்றுப் போட்டியில் டேபிள்டெனிஸ், பட்மின்டன், கரம், டெனிக்கொய்ட். செஸ் ஆகியனவும் இன்னும் பல விளையாட்டுக்களும் நடைபெறவிருக்கிறன. (இ)

### தேவை

20 வயதிற்குட்பட்ட உதவிப் பியோன் வேலைக்கு ஆள் தேவை. காரியாலய நேரத்தில் நேரில் வரவும். Tax and Accounting Services, 37, பிரப்பன் குளம் வீதி, யாழ்ப்பாணம். 2059

அனுபவமுள்ள காவற்காரர் தேவை. 45 வயதுக்கு குறையாதவராக இருக்கவேண்டும். விண்ணப்பங்கள் யாவும் தை 31ந் திகதிக்கு முன்பாக அதிபர், சுண்டிக்குளி மகளிர் கல்லூரிக்கு அனுப்பி வைக்கவும். 1980

## ஜெகன்கோஷ்டி சாம்பியனானது

[அரியாலை]

பாஷையூர் யூப்பிற்றர்ஸ் கழகத்தின் சார்பில் பாஷையூர் புனித அந்தோனியார் விளையாட்டுக் கழகத்தினால் நடாத்தப்பட்ட உதைபந்தாட்டப் போட்டியில் 9 விளையாட்டுக் கழகங்கள் கலந்துகொண்டன.

இறுதிப் போட்டியில் கலந்துகொண்ட ஜெகன் கோஷ்டி புலட்ஸ் கோஷ்டியை 4:2 கோல்கள் வித்தியாசத்தில் தோற்கடித்து சாம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது.

இறுதிப் போட்டிக்கு பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட வடபிரதேச உதவி பொலிஸ் அதிபர் திரு. எஸ். எஸ். நவரத்தினராசா போட்டியாளர்களுக்கு பரிசில்களை வழங்கினார்கள். [க]

### கல்வி

பிரஞ்சு மொழி, ஜேர்மன் மொழி வகுப்புக்கள் இலகுவான முறையில் போதனை, குறுகிய காலப் பயிற்சி—அனைவரும் சேரலாம். ஆரம்பம்: 29—01—82 நாஷனல் அக்கடமி, மொம்சாக் கட்டிடம், 11, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 2046

## Patrician Industrial Institute

59, ST. PATRICK'S ROAD, JAFFNA.

**புதிய வகுப்புக்கள் ஆரம்பம் 6-02-82**

★ MOTOR MECHANISM
★ ELECTRICAL WIRING
★ WELDING

(செய்முறை, அறிமுறை, பயிற்சி உட்பட)
குறிப்பிட்ட தொகை மாணவர்கள் அனுமதிக்கப்படுவர்.
தொடர்பு கொள்ளவும்:

(2025) பதிவாளர்.

## வெளிநாட்டில் பயிற்சி

''ரெருசோ'' கற்களும், எலக்ரோனிக்ஸ் உபகரணங்களும் தயாரிக்கும் தொழிற்சாலையில் பணிபுரிவதற்கு ஆட்கள் உடன் தேவை. வெளிநாட்டில் பயிற்சியும் அளிக்கப்படும். விபரங்களை இரண்டு 50 சத முத்திரை அனுப்பி பெற்றுக்கொள்ளவும்.

**CEY-SIN DEVELOPMEN ENTERPRISES**
**சிதுதன்கேணி**

2074

## Computer Programming Course WITH Practical Training

வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகம் வெற்றிகரமாக நடாத்திவரும் பயிற்சிகளுள் ஒன்றான

"COMPUTER PROGRAMMING AND DATA PROCESSING"
(15—20 WEEKS)

பயிற்சிநெறியின் மூன்றாவது மாணவத் தொகுதியினருக்கான விரிவுரைகள் FEB 82 நடுப்பகுதியில் தொடங்கவுள்ளது. மேற்கண்ட பயிற்சிநெறியோடு புதிதாக

"PROGRAMMING IN BASIC LANGUAGE WITH PRACTICALS"
(5—8 WEEKS)

என்ற பாடத் திட்டமும் விரைவில் ஆரம்பிக்கப்பட உள்ளது.

SCHOLARSHIPS AVAILABLE FOR DESERVING STUDENTS

விரிவுரைகள் இங்கிலாந்தில் பட்டம்பெற்று பயிற்சி பெற்ற விரிவுரையாளர்களால் நடாத்தப்படும். விரிவுரைகள் சனி, ஞாயிறு மற்றும் விடுமுறை நாட்களிலும் நடைபெறும்.

**மேலதிக விபரங்கட்கு தொடர்பு கொள்ளவும்**

**Director**

230, சட்டநாதர் வீதி, நல்லூர்—யாழ்ப்பாணம்

2079

## காங்கேசன்துறை உதவிப் பொலிஸ் அதிபர்

(மாவிட்டபுரம்)

காங்கேசன்துறை உதவிப் பொலிஸ் அதிபராக திரு. ஹெட்டியாராய்ச்சி நியமனம் பெற்றுவந்துள்ளார்,

காங்கேசன்துறை உதவிப் பொலிஸ் அதிபராகக் கடந்த ஜனவரி 1ம் திகதி இடமாற்றம் பெற்றுவந்த திரு. காமினி பெரேரா இடமாற்றம் பெற்று கொழும்பு சென்றதையடுத்து திரு. ஹெட்டியாராய்ச்சி இப்போது நியமனம் செய்யப்பட்டுள்ளார். மாத்தறைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியாக இருந்த இவர் உதவிபொலிஸ் அதிபராக பதவி உயர்வுபெற்று இங்கு வந்துள்ளார். (அ)

## நியமனம்

[புலோலி]

அல்வாய் வடக்கைச் சேர்ந்த திரு. இரா இராஜேஸ்வரன் மட்டக்களப்பு பல்கலைக்கழக நூலக உதவியாளராக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

வடமராட்சி வடக்கு—கிழக்கு சனசமூக நிலையங்களின் சமாஜச் செயலாளரான இவர் இலங்கை நூலக சங்க வடபிரிவின் பதில் செயலாளரும் வெளியீட்டு உத்தியோகத்தரும், யாழ். மாவட்ட நூலகவியல் மாணவர் ஒன்றியச் செயலாளருமாவார்.

## விபத்து மரணம்

(மாவிட்டபுரம்)

காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலையில் இடம்பெற்ற 19 வயது இளைஞனின் மரணம் விபத்து மரணம்என மரணவிசாரணை அதிகாரி தீர்ப்பு வழங்கியுள்ளார்,

கரவெட்டியைச் சேர்ந்த நடராஜா பூலோகநாதன் (19 வயது) என்னும் இளைஞர் சீமெந்துத் தொழிற்சாலையில் வேலை செய்து கொண்டிருந்த சமயம் விபத்தில் சிக்கி மரணமானது தெரிந்ததே,

இது குறித்து திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. நாதம்பிராஜா விசாரணை நடத்தினார்.

பிரேத பரிசோதனை நடத்திய டாக்டர் தர்மராணி சிவயோகன் நெஞ்சில் கண்டல் காயமும் முதுகெழும்பு முறிந்தும் ஈரல் பதிக்கப்பட்டும் வயிற்றில் இரத்தப்பெருக்கு ஏற்பட்டும் மரணம் சம்பவித்ததாக கூறினார்.

விபத்து மரணமெனத் தீர்ப்பு வழங்கப்பட்டது.

## சொந்தக் கட்டிடம் அமைக்க ஏற்பாடு

]வேலணை[

வேலணை தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கம், சங்கத்திற்கெனத் தனியான பணிமனை ஒன்றை அமைப்பதற்கென வேலணை கமநலச்சேவை நிலையத்திற்கு அருகாமையில் 30 ஆயிரம் ரூபாவில் காணியைக் கொள்முதல்செய்திருக்கின்றது

இக்காணியில் இருமாடிக் கட்டிடமொன்றை அமைப்பதற்கான முயற்சிகளை சங்கத் தலைவர் திரு. சி. கந்தசாமி செய்துவருகின்றார். தற்பொழுது சங்கம் தனியாருக்குச் சொந்தமான கட்டிடமொன்றில் வாடகைக்கு இயங்கிவருகின்றதும் குறிப்பிடத்தக்கது.

## இந்...

(2ம் பக்கத் தொடர்ச்சி)

ஆலோசனை நடத்துவதற்காக நேற்று முன்தினம் கூட்டப்பட்ட மநாகரசபை உறுப்பினர்களின் கூட்டத்தை தமிழ் காங்கரஸ் உறுப்பினர்கள் இருவரும் பகிஷ்கரித்தனர். (யா [illegible])

## வெள்ளை அறிக்கை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

''சுதந்திரக்கட்சி இன்று இரண்டாகப் பிளவுபட்டுள்ளது, தமிழர் விடுதலைக்கூட்டணிக்கு தமிழ் மக்களின் பிரச்னை இருக்கிறது. தேர்தல் அண்மித்துவிட்டதால ஐக்கியதேசியக் கட்சியை வீழ்த்த இடதுசாரிகள் அரசுக்கு எதிராக மாணவர்களைத் தூண்டுவதன் மூலம் கல்வி வெள்ளை அறிக்கையை ஒரு சாதகமாகப் பயன்படுத்தி வருகின்றனர். என்னதான் நடந்தாலும் எம்மை எவரும் வீழ்த்திவிட முடியாது.

''பாராளுமன்றத்தைச் சுற்றி எம். பிக்களைப் பாதுகாப்பதற்காகவே பொலிஸ் காவல் போடப்பட்டுள்ளது. எம். பிக்களைப் பாதுகாப்பது எமது கடமை, எதிர்க்கட்சித் தலைவருக்குப் பொலிஸ் பாதுகாப்புத் தேவையில்லாவிடின் பாதுகாப்பை எடுத்துவிடுவோம்.''

சபாநாயகர்: சபையின் பாதுகாப்பு எனது விடயம் அதில் எதுவித கேள்விக்கும் இடமில்லை.

அமைச்சர் திரு. எஸ். தொண்டமான் பேசுகையில் குறிப்பிட்டதாவது'

''கொத்தணிப் பாடசாலைகள் அமைப்பு கல்வி வெள்ளை அறிக்கையில் சந்தேகத்திற்கிடமாகஉள்ளது. இனரீதியிலேயே கொத்தணிப் பாடசாலைகள் அமைக்கப்பட வேண்டும். இல்லையேல் அரசுசிறுபான்மையினரின் ஆதரவை இழந்துவிடுமென்றும் சகல-மக்களினதும் தாய்மொழியே போதனமொழியாக இருக்கவேண்டும்'' என்று தெரிவித்தார், (இ)



அறவழிப் போராட்டக்குழுவின் ஆதரவில் இன்று மாலை யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் இசை விருந்தளிக்கும் அமெரிக்க இசைக்கலைஞர் திரு. டேவிட் அல்டேர்ட் வீணைவாசித்துக்கொண்டிருப்பதையும் டச்சு இளைஞர் திரு. நிக்லஸ் ரேய் கிற்ருர் வாசித்துக்கொண்டிருப்பதையும் இப்படத்தில் காண்க.

### பெண்ணின்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நல்லூரைச் சேர்ந்த திருமதி தர்மதேவி சிறிசுப்பிரமணியம் வீரமாகாளியம்மன் கோவிலுக்குச் சென்றுவிட்டு வீடு திரும்பிக்கொண்டிருந்தபோது வைமன் வீதியில் சைக்கிளில் வந்துகொண்டிருந்த மூன்று வாலிபர்களில் ஒருவர் திடீரென அவரது மூன்று பவுண் தங்கச்சங்கிலியை அறுத்துக்கொண்டு ''முடிந்தால் ஓடிவந்துபிடி'' என்று சவால்விட்டு அப்பெண்ணுக்கு தங்கச்சங்கிலியைக் காட்டி கழற்றிக்கொண்டுஓடியதாகவும், திகிலடைந்த அப்பெண் கூக்குரலிட்டுக்கொண்டு துரத்திச் சென்றதாகவும் பொலிஸின்விசாரணையில்தெரிவிக்கப்பட்டது.

சத்தத்தைக் கேட்டுச்சிலர் சைக்கிளிலும், மோட்டார் சைக்கிளிலும் துரத்திச்சென்று வீரமாகாளியம்மன் கோவிலுக்கு முன்பாக மூன்று வாலிபர்களில் ஒருவரை மடக்கிப் பிடித்தனர். அவரைச்சோதித்தபோது அவரது சட்டைப் பையில் சங்கிலியின் ஒருதுண்டு இருந்ததாம். யாழ். நகரைச் சேர்ந்த சந்திரசேனன் என்ற இந்த வாலிபர் பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

## மரண அறிவித்தல்

### ராஜரட்னம் சாமுவேல் போல்பிள்ளை

கோப்பாயைச் சேர்ந்த ராஜரட்னம் சாமுவேல் போல்பிள்ளை காலமாகிவிட்டார். இவர் லீலா, காலஞ்சென்ற லிடியா ஆகியோரின் தந்தையும், ஜி. எஸ். சைமன் இராசையா, காலஞ்சென்ற ஜே. ஏ. ரி. சேதுகாவலர் ஆகியோரின் மாமனும், ஹரிசனின் பேரனும் ஆவார். அன்னாரது பூதவுடல் கோப்பாய், பருத்தித்துறை வீதியிலுள்ள 85ம் இலக்க இல்லத்திலிருந்து யாழ்ப்பாணம் கொட்டடியிலுள்ள சேமக்காலைக்கு நாளை 25—1—82 திங்கட்கிழமை பிற்பகல் 4-00 மணிக்கு எடுத்துச் செல்லப்படும்.

2083

### இன்று நூல்வெளியீடு

(யாழ்ப்பாணம்)

இலங்கை தேசிய கயரோகத் தடுப்புச் சபையின் யாழ் கிளையின் ஆதரவில் கயரோகம் தொடர்பான பிரசுரம ஒன்று இன்றுகாலை யாழ்ப்பாணம் மில்க்வைற் தொழிலகக் கூட்ட மண்டபத்தில் நடைபெறுகிறது,

டாக்டர் ஜே. ஆர். வில்சன் சங் சகோதரி ஈ பேக்கர் ஆகியோர் இவ்வைபவத்தில் கலந்து கொள்வர். (இ)

### இன்று அமாவாசைத் தைத்திருவிழா

(யாழ்ப்பாணம்)

இணுவில் சிவகாமி அம்மன் கோவிலில் இன்று மாலை அமாவாசைத் தைத்திருவிழா நடைபெறுகிறது. அபிஷேகத்தைத் தொடர்ந்து அபிராமி பாடல்களும் விசேஷ சொற்பொழிவுகளும் இடம்பெறும்,

### யாழ்.--

(1-ம் பக்கத் தொடர்ச்சி]

இத்திட்டம் அனுராதபுரத்திற்கும் மற்ற நகரங்களுக்கும் விஸ்தரிக்கப்படவிருக்கிறது. இத்திட்டத்தினுல் தந்திகள் தாமதமாகப் போய்சேரும் குறைநீங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.


# இதோ ஆரம்பமாகிவிட்டது!

தேசிய தொலைக்காட்சிச் சேவையின் பரீட்சார்த்த ஒலிபரப்பு கொக்காவில் நிலையமூடாக ஒலிபரப்பப்படுகின்றது.

## உங்கள் இல்லங்களில் கண்டுகளிக்க எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்!

- ★ ரெலிபங்கன் (கலர்) 36 CM, 42 CM, 51 CM, 56 CM, 66 CM
  ரூபா 11,460-க்கு மேல்
- ★ நாஷனல் (கலர்) 36 CM, 48 CM, 51 CM, 66 CM
  ரூபா 9,790-க்கு மேல்
- ★ நாஷனல் (கறுப்பு, வெள்ளை) 30 CM, 36 CM, 45 CM, 51 CM
  ரூபா 2,730-க்கு மேல்
- ★ கோல்ட்ஸ்ரார் (கறுப்பு, வெள்ளை) 35 CM, 43 CM
  ரூபா 2,850-க்கு மேல்

மற்றும் பலதரப்பட்ட ஏரியல், பூஸ்ரர், வயர்கள் உண்டு.

ஏரியல் பொருத்திக் கொடுப்பதில் முன்னணி வகிப்பவர்கள்

# V. K. இராசரத்தினம்

95, ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 7447


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 68-ம் இலக்கத்திலுள்ள ''ஈழநாடு'' லிமிட்டெட்டுக்காக யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதி, 303 ம் இலக்கத்திலுள்ள கலாநிலைய அச்சகத்தில் 1982 ஆம் ஜனவரி மீ 24-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as NewsPaper. The General P.O..Sri Lanka Regd. Q.E.100236/81. P.O. Box 49, Jaffna. தொலைபேசி: 7707, 389, 8126.